In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆன்மிக அமிர்த கலசங்கள்

திருமதி. பத்மா ராஜகோபாலன்

ஸ்ரீ ஆனந்த நிலையம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆன்மிக அமிர்த கலசங்கள்

ஆசிரியர்:

திருமதி **பத்மா ராஜகோபாலன்**

ஸ்ரீ ஆனந்த நிலையம்

(மாம்பலம் ரயில்நிலையம் எதிரில்)

29/5 ரங்கநாதன் தெரு, தி. நகர், சென்னை - 600 017

Ph : **24346242**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூல் விவரம்

தலைப்பு	:	ஆன்மிக அமிர்த கலசங்கள்
ஆசிரியர்	:	பத்மா ராஜகோபாலன்
பொருள்	:	ஆன்மிகம்
உரிமை©	:	ஆசிரியருக்கு
பதிப்பு, ஆண்டு	:	முதற்பதிப்பு, 2006
மொழி	:	தமிழ்
நூல் அளவு	:	18.5 x 12.5 கிரௌன்
எழுத்து	:	12 புள்ளி
பக்கங்கள்	:	96
வெளியீடு	:	ஸ்ரீ ஆனந்த நிலையம் 29/5 ரங்கநாதன் தெரு, தியாகராயர்நகர், சென்னை - 600 017. ✆ 044 - 2434 6242
விலை	:	ரூ. 30

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அணிந்துரை

'ஆன்மீக அமிர்த கலசங்கள்' என்ற தலைப்பில் ஆசிரியர் திருமதி பத்மா-ராஜகோபாலன் அவர்கள் எழுதி தொகுத்து வெளியிட்டுள்ள கட்டுரைகளை படித்தேன்.

ஆன்மீகம் என்ற பாதையில் மென்மையாக படிப்போரை நடத்திச் சென்று பாங்காக பல செய்திகளை படித்து உணரச் செய்துள்ள பக்குவம் பல வருடங்களாக எழுத்துத் துறையில் அனுபவம் பெற்றவர்களால் மட்டுமே செய்யக் கூடிய ஒன்று தன் கணவர், தன் குடும்பம் என அவர்களுக் காகவே வாழ்ந்து வரும் ஆசிரியர் தன்னுள் புதைந்து இருந்த எழுத்துத் திறமையினையும் தான் கண்டு, கேட்டு ரசித்து, உணர்ந்த பல செய்திகளையும் வாசகர்களோடு மிக சுலப மாய் சரள நடையில் பகிர்ந்து கொண்டுள்ள முறை ஆச்சர்ய மடைய வைக்கிறது.

'அவரவர் குடும்பத்திற்காக அவரவர் உழைப்பதில் என்ன தப்பு' என்று அவர் கேட்டிருப்பது சதா சலித்துக் கொள்ளும் ஒரு சில பெண்மணிகளுக்கு அன்பான அறிவுரை யாக அமைந்துள்ளது.

'கோகுலமே என்ன புண்ணியம் செய்தனை நீ' என்ற கிருஷ்ண பரமாத்வினைப் பற்றிய கட்டுரையில் யசோதை தன் கால்களில் குழந்தை கிருஷ்ணனை படுக்க வைத்து நீராட்டும் வர்ணனையை எளிய நடையில் படம் பார்ப்பது போன்ற உணர்வில் எழுதியுள்ளது ஆசிரியரின் திறமையே.

ஆசிரியரும், அவரது கணவரும், மூன்று குழந்தைகளும் திரு ராகவேந்திர சுவாமிகளின் அருளால் காப்பாற்றப்பட்ட மகிமை படிப்போர் நெஞ்சினை நெகிழ வைக்கும்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ சித்ர குப்த ஸ்வாமி ஆலய கட்டுரையும் அண்டிய வருக்கு அபயம் அளிக்கும் அன்னை கட்டுரையும் இவர் பிரபல ஜோதிடரின் மனைவி, ஜோதிடத்திலும், பரிகாரம் கூறுவதிலும் இதனை நன்கு நிரூபித்துள்ளார் என சொல்ல வைக்கின்றது.

காயத்ரி மந்திரமும், காரிய சித்திகளும் என்ற கட்டுரை அனைவரும் அவசியம் படித்து பயன் பெற வேண்டிய ஒன்றாகும்.

இப்படி கூறிக் கொண்டே செல்லலாம். ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருப்பதாகச் சொல்வார்கள். இங்கு தன் கணவரையும் வெற்றி பெறச் செய்து தானும் வெற்றி பெற்று வாழும் திருமதி பத்மா ராஜகோபாலன் அவர்கள் ஆற்றலுக்கு வயது ஒரு தடையல்ல என்று நிரூபித்துள்ளனார்.

திரு.ஏ.எம்.இராஜகோபலன் என்ற இல்லற சித்தரின் மனைவியாய் வாழ்ந்து கொண்டிருக்கும் திருமதி பத்மா ராஜகோபாலன் அவர்கள் பெண் சமுதாயத்தில் ஒரு ஒளிர் நட்சத்திரம்.

பல சிறப்புகள் பெற்ற இந்த அன்னையின் கட்டுரை களும் பளிச்சிடுவது நியாயம் தானே. திருமதி பத்மா இராஜகோபாலன் அவர்களின் எழுத்துப் பணி தொடர வேண்டும் என்பதே அனைவரின் ஆசை. அதனை அவர் பூர்த்தி செய்வார் என எதிர்பார்கின்றோம். இதில் இடம் பெற்றுள்ள பல கட்டுரைகள் ‘கோகுலம் கதிர்’ மாத இதழில் வெளியானவை என்பதில் பெருமை கொள்கிறேன். ஆன்மீக வழியில் தனது வாழ்க்கையினை நடத்தி வரும் ஆதர்ஷ தம்பதியினர் இவர்கள்.

-கமலி ஸ்ரீபால்

ஆசிரியர் கோகுலம் கதிர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



"பூஜ்யாய ஸ்ரீ ராகவேந்த்ராய ஸத்யதர்ம ரதாயச
பஜதாம் கல்ப விருட்சாய நமதாம் காமதேனுவே"

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நம்பினோரைக் கைவிடாத
நரசிங்கபுரம் ஸ்ரீ அனுமன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதிப்புரை

''ஆன்மீக அமிர்த கலசங்கள்'' வாழ்க்கைப் பாதையில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஆன்மிக உணர்வுடன் வளர்க் கப்படும் குழந்தை நல்ல எண்ணத்துடனும், நல்ல பாதை யைத் தேர்ந்தெடுத்து உயர்வடைவது திண்ணம்.

முழுசுதந்திரம் கொடுத்து வளர்க்கப்படும் குழந்தை அதிக செல்லமாக வளர்க்கப்டும் குழந்தையும் எவ்வளவு இன்னல்களுக்கு ஆளாகின்றன என்பதும் அனுபவத்தில் நாம் பார்க்கிறோம்.

ஒரு மனைவியாக, ஒரு தாயாக, ஒரு பாட்டியாக, ஒரு மந்திரியாக கூட்டுக் குடும்பத்தை எவ்வாறு நடத்திச் செல்வது அனைவருக்கும் குறைவு ஏற்படாத வகையில் விட்டுக்கொடுத்து வாழ்வில் உயர்வது எவ்வாறு என்று ஆசிரியரின் வாழ்க்கையே ஓர் அனுபப உதாரணமாகும்.

எவ்வளவு தான் நாகரீகம் வளர்ந்து விட்டாலும் நமது நாட்டின் பண்பாடு, கலாச்சாரம், ஒழுக்கம் இவைகளில் எள்ளளவும் குறைவு படாமல் வயது எண்பதைத் தாண்டி வாழ்ந்து வரும் தம்பதியரை வழிகாட்டியாக அனைவரும் எடுத்துக் கொண்டு வாழ வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறோம்.

எண்ணற்றவர்களின் குறைகளைக் கேட்டு, தக்க உபாயங்கள், பரிகாரங்களையும், வழிமுறைகளையும் கூறி ஆசீர்வாதம் செய்யும் திருமதி.பத்மாராஜகோபாலன் அவர் களின் இந்த நூல் மக்களிடம் சென்று அனைவரையும் நல் வழிப்படுத்தும் என்று கருதுகிறோம்.

இவண்.

வி.ஆர்.கே.சிதம்பரம்

பதிப்பகத்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருளடக்கம்

பக்கம்

1. என் கணவர்தான் எனக்குப் பெருமை 3

2. கோகுலமே! என்ன புண்ணியம் செய்தனை நீ செய்தனை நீ 9

3. காமதேனு கரம்நீட்டிக் காத்த அந்த ஒரு வினாடி... 14

4. வாழ்க்கைக்கு ஒளிதரும் தீப ஒளிப்பண்டிகை 19

5. குன்றில் அமர்ந்து குறைதீர்க்கும் குமரன் 26

6. ஸ்ரீ சித்திரகுப்த ஸ்வாமி ஆலயம் 39

7. அண்டியவர்க்கு அபயம் அளித்திடும் அன்னை...! 41

8. மதம் இல்லாத மகான் ஸ்ரீ படே சாஹிப் 46

9. என்றும் கைவிடேன் எனது பக்தர்களை 51

10 பரமராம ஷேத்திரத்தின் பவித்திரமான திருக்கோயில்கள் 59

11 காயத்ரி மந்திரமும் பரிகாரங்களும் 65

12 செல்வத்தை மட்டும் வைத்துக் கொண்டு என்ன செய்வது? 79

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என் கணவர்தான் எனக்குப் பெருமை!

- திருமதி பத்மா ராஜகோபாலன்

ஏ.எம்.ஆர் ஜோதிட உலகின் சூப்பர் ஸ்டார். 79 வயது இளம் வாலிபர். சொன்ன சொல் தவறாது பலிக்கும் வாக்கு சத்தியம் உடையவர். ஆழ்ந்த ஜோதிடஞானம் உடையவர். ஜோதிடத்தினை ஏளனமாகப் பேசும் அநேகரிடையே, இது விஞ்ஞானம் என அனுபவபூர்வமாய் நிரூபித்துக் கொண்டு வருபவர். மக்களிடையே பக்திக்கும், பரிகாரங்களுக்கும் சிறந்த பலன் உண்டு என்பதை உணரச் செய்தவர். அன்பான வார்த்தைகள், சிரித்த முகம், கம்பீரத்தோடு கூடிய எளிமையான தோற்றத்திற்குச் சொந்தக்காரர். காலத்திற்கேற்றாற் போல், குறிப்பாக பெண்கள் முன்னேற்றம், விதவை மறுமணம் போன்ற முற்போக்கான எண்ணங்கள், செயல்களுக்கு பலத்த ஆதரவு கொடுப்பவர். எண்ணற்ற ரசிகர்களை உடையவர். இத்தனைக்கும் மேலாக ஜோதிடம் பார்ப்பதற்காக ஒரு ரூபாய் கூட வசூலிக்காதவர். குமுதம் ஜோதிடம் இதழின் ஆசிரியர். இப்படிப்பட்ட அடுக்குப் புகழினைக் குவித்து வரும் இவரின் துணைவியார் திருமதி பத்மா ராஜகோபாலன் அவர்களைச் சந்திக்க முனைந்த பொழுது....

திருவல்லிக்கேணியில் ஆடம்பரமற்ற, அமைதியான, ஆஸ்ரமம் போன்ற ஒரு வீடு. வீட்டிலும், வெளியிலுமாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெட்டி, படுக்கையுடன் ஜனங்கள், வீட்டில் ஏதேனும் விசேஷமோ என்று வந்திருந்தவர்களிடம் விசாரித்த பொழுது, பலர் பல இடங்களிலிருந்தும், வெளியூரிலிருந்தும் திரு. ராஜகோபாலனைக் காண வந்தவர்கள் என்று புரிந்தது. விடாப் பிடியாக தங்கள் ஜாதகத்தினை இவரிடம் காண்பித்து விட்டுத்தான் செல்ல வேண்டும் என்ற முடிவோடு உட்கார்ந்திருந்தார்கள். எண்ணிக்கைகள் கூடின. தொலைபேசி விடாமல் அடித்துக் கொண்டிருந்தது. பம்பரமாய் சுற்றி, தொலைபேசியில் ஒரு இளம் பெண்மணி பதில் கூற, தட்டு நிறைய காபி டம்ளர்களுடன் வந்திருந்தவர்களை உபசரித்துக் கொண்டே இதோ வந்து விடுவார் என தைரியம் அளித்துக் கொண்டிருந்தார் ஓர் அம்மணி. அந்த அம்மணிதான் திருமதி. பத்மா ராஜகோபாலன். அந்த இளம் பெண்மணி திரு. ராஜகோபாலன் அவர்களின் மருமகள் லக்ஷ்மி என்று அமர்ந்திருப்பவர்கள் கூறினார்கள். குடும்பமே முனைந்து பலன் எதிர்பாராது, முகம் சுளிக்காது செய்யும் இந்தச் சேவை ஆச்சர்யத்துக்குள்ளாக்கியது. சரி வந்த வேலையை கவனிப்போம் என அந்த அம்மணியை நெருங்கினோம். என் கணவர் என்ற தலைப்பில் உங்கள் கணவர், உங்கள் குடும்பம் பற்றிக் கூறுங்களேன் என்றோம்.

ஒல்லியான தேகம். தீர்க்கமான பார்வை, தெளிவான, அடக்கமான, நிறைகுடமாகத் திகழும் திருமதி பத்மா ராஜகோபாலன் பேச ஆரம்பித்தார்.

''எங்களுக்குக் கல்யாணம் ஆகி ஐம்பது வருடங்கள் ஆகின்றன. இவர் திருச்சி செயின்ட் ஜோசப் காலேஜில் படித்தவர். 1953-ல் கல்யாணம். அப்பொழுது எனக்கு

பத்தொன்பது வயது. இவருக்கு 29 வயது. அவர் ஹிந்து நாளிதழில் வேலையில் இருந்தார். கூட்டுக் குடும்பம். இவரது தாய்வழி மாமா ஸ்ரீரங்கத்தைச் சார்ந்தவர். ஜோதிட நிபுணர். ஜோதிடத்தில் அவரே என் கணவருக்கு ஆசான். இளம் வயதில் எங்கள் உறவினர்கள், நெருங்கிய, தெரிந்த நண்பர்கள் இவரிடம் ஜாதகம் பார்த்துக் கொள்வார்கள். அப்பொழுது எல்லாம் திருமணப் பொருத்தத்திற்காகத்தான் அதிகம் பேர் ஜோதிடரிடம் வருவார்கள். கட்டு ஜாதகங்கள் கொண்டு வந்தாலும் பொருந்தவில்லையென்றால் பொருந்தவில்லை என்று கூறிவிடுவார். துல்லியமாய் ஒரு ஜாதகத்தின் குணம், வருங்காலம் பற்றிக் கூறும் திறமை அப்பொழுதே இவரிடம் இருந்தது. ஆனால் ஒருவரிடமும் ஜாதகம் பார்ப்பதற்காக என்று ஒரு நயா பைசா கூட வாங்கியதில்லை.

தெய்வீகக் கலையை விலை பேசக் கூடாது என்ற கொள்கை இவரிடம் ஆழமாய் இருந்தது. எனக்கு ஐந்து பையன்கள். ஒரு பெண். கர்ப்பத்தில் இருக்கும் பொழுதே இன்ன குழந்தை என உறுதியாகக் கூறுவார். ஆச்சரியப்படுவேன்.

ஒருமுறை (1978 அக்டோபர் 12 அன்று) இவர் மும்பை சென்றிருந்த பொழுது, ஒரு தொழிலதிபர் இவரிடம் த்னது ஜாதகத்தினைக் காட்டினார். அன்று இரவே அத்தொழிலதிபர் இரவு விமானத்தைப் பிடித்துச் செல்ல வேண்டி இருந்தது. ஜாதகத்தினை ஆய்ந்த என் கணவர் அவர் கண்டிப்பாக அன்று விமானத்தில் செல்லக்கூடாது என்று கூறினார். அவர் கேட்கவில்லை, என் கணவர் மன்றாடினார். ரெயிலில் செல்லுங்கள் எனச் சொல்லி, ரெயில்வே ஸ்டேஷனுக்கு

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவரே ஏற்பாடுகள் செய்தார். தொழிலதிபர் மறுத்து விட்டார். அவர் செல்ல இருந்த விமானம் அன்று விமானக் கோளாறு காரணமாக கான்சல் செய்யப்பட்டது. ஆனால் சிறிது நேரத்தில் இன்னொரு விமானம் ஏற்பாடாகிறது. ''காரவல் ஏர் கிராப்ட்' என்ற அந்த விமானத்திலும் இயந்திரக் கோளாறு ஏற்பட்டது. விமான நிலையம் வரை அத்தொழிலதிபருடன் சென்ற என் கணவர் கடைசி நிமிடம் வரை செல்ல வேண்டாம் என அவரிடம் கெஞ்சினார். ஆனால் அவரோ மறுத்து விமானத்தில் ஏறினார். விமான நிலையத்தினை விட்டுப் புறப்பட்ட சில நிமிடங்களில் விமானம் தீக்கிரையாகியது. கொழுந்து விட்டெரிந்த அந்த விமானத்தை என் கணவர் கண்ணுற்று மிகவும் வேதனை அடைந்தார். இவரது கணிப்பின் துல்லியத்தினை அப்பொழுதே அங்குள்ள அநேகரும் உணர்ந்த காரணத்தினால் இன்று வரை இவர் அனுமதி இல்லாமல் அவர்கள் எதுவும் செய்வதில்லை.

இப்படி எத்தனையோ நிகழ்ச்சியினைக் கூறலாம். மக்களுக்கு சிறந்த சேவை செய்ய முடிகின்றது என்ற மகிழ்ச்சிதான் எங்களை களைப்படையாது வேலை செய்ய வைக்கின்றது. காலையில் ஐந்தரை மணிக்கே பலர் வந்து காத்திருக்கின்றனர். லோகத்தில் இத்தனை கஷ்டங்களா என்று வேதனையாயிருக்கு.

ஆனால் இவருக்கு ரெஸ்ட், வாக்கிங் இவற்றுக்கெல்லாம் நேரம் என்பதே இல்லை. இறைவன் கொடுத்த இந்த உடலில் பலம் இருக்கும் வரை, உடல் முடியும் வரை நான் இந்தச் சேவையை செய்கிறேனே என்று கூறுவார். நாங்கள் யாரும் அவருக்கு வீட்டில் எந்தவிதத் தொந்தரவும் இல்லாமல் பார்த்துக் கொள்கிறோம்.

இன்னொன்று கேட்டால் உங்களுக்கு ஆச்சர்யமாக இருக்கும். என் பையன்கள், மகள் திருமணப் பொருத்தம் தவிர வேறு எதற்காகவும் எங்களுக்கு ஜாதகம் பார்க்க அவருக்கு நேரம் கிடைக்கவில்லை என்பதே உண்மை. ஆனாலும் அவருக்கு எல்லாமே தெரியும் என்பதால் அவரை கேட்பதும் இல்லை. எனது பெரிய பையனும் ஜாகதம் பார்ப்பதில் ஆர்வம் காட்டி தேர்ச்சி பெற்றுள்ளார்''.

சமீபத்தில் உலக நிகழ்ச்சிகளில் உங்கள் கணவரின் முன் கூட்டிய கணிப்பினைப் பற்றிக் கூற முடியுமா?

தாராளமாக! ஆப்கானிஸ்தான் போரினைப் பற்றி ஒரு வருடம் முன்பே இவர் கூறி, எழுதியிருந்தது பலருக்குத் தெரியுமே!

உங்களுக்கென்ற தனிப்பட்ட விருப்பு, கருத்துக்கள் உண்டா?

உலக சேவை எங்களுக்கு பெருமாள் சேவை, இதுவே எனக்குப் போதும். எனக்கென்று தனியாக எந்த ஒரு ஆசையும் கிடையாது. என் பிள்ளைகள் கூட தன் தந்தையால் பலரின் துயருக்கு ஒரு வழி காட்ட முடியும் எனும் பொழுது அதற்கான உதவிகளை அன்போடு செய்கின்றனர்.

சின்ன வயசில் நானும் என் அக்காவும் பள்ளியில் நடக்கும் நிகழ்ச்சிகளைக் கூட கதை போல் எழுதுவோம். சமீபத்தில் என் பிள்ளைகளைக் காண அமெரிக்கா சென்றபோது, அங்கு எனக்குக் கிடைத்த சிறிது தனிமைப் பொழுதில் நான் ரசித்த அழகான இயற்கைக் காட்சிகள் என்னை மீண்டும் எழுதத் தூண்டின.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அகோபில மடத்தின் ஜீயர் அவர்கள் எனது கணவருக்கு ஆஸ்தான வித்வான் என்ற பட்டத்தினை அளித்து கௌரவித்த பொழுது நெகிழ்ந்து போனேன்.

எனது கணவர் குழந்தை, இயற்கை, நல்ல பேச்சு என நல்லவற்றினை ரசிப்பவர். சிறந்த சங்கீத ஞானம் கொண்டவர். தெய்வபக்தியும், ஒழுக்கமும் கொண்ட குடும்பம் எங்கள் குடும்பம். இறைவன் அருளால் என் பிள்ளைகளும், மருமகள்களும், மகளும் அவ்வாறே கிடைத்துள்ளனர். இதுவே இறைவனின் மிகப்பெரிய கருணைதான். நான் ஒரு மகளை மணமுடித்து கொடுத்து, ஐந்து மருமகள்களை மகள்களாகப் பெற்ற அதிர்ஷ்டசாலி. 62 வயதில் நான் திவ்ய ப்ரபந்தம் படித்தேன். என் மருமகள்கள் சிறு வயதிலேயே படித்து விட்டனர்.

ஆக எனக்குத் தெரிந்ததெல்லாம், நான் உணர்ந்த தெல்லாம் என் கணவர்தான். அவர்தான் எனக்குப் பெருமை.

இன்றைய பெண்களுக்கு உங்கள் அறிவுரை என்ன?

பொறுமை அவசியம். 'தான்' என்ற ஈகோ கூடாது. கொஞ்சம் வளைந்தால் போதும். ஜெயித்து விடுவீர்கள். நல்ல பலனை அனுபவிக்கப் போவதும் நீங்கள் தானே! ஆயிரம் சொன்னாலும் கணவர் என்பது உயர்ந்த ஸ்தானம். அதற்காக நாம் அடிமை என்ற அர்த்தமில்லை. அவரவர் குடும்பத்திற்காகத் தேய்வதில் என்ன த்வறு?

அமைதியான, அழுத்தமான வார்த்தைகளால் வாழ்கையினை புரிய வைக்கிறார். ஆதர்ஷ தம்பதிகளை மனமார வணங்குகிறோம். ஓர் ஆணின் மிகப் பெரிய வெற்றிக்குப் பின்னே ஒரு பெண்ணின் தியாகமும், அன்பும் இருக்கின்றது என்பது உண்மை தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோகுலமே! என்ன புண்ணியம் செய்தனை நீ? செய்தனை நீ?

ஒரு சமயம் நாரத மகரிஷி இந்திரனைப் பார்ப்பதற்காக தேவர்களின் உலகமான இந்திர லோகத்துக்குச் சென்றார். அங்கு இந்திரனின் அரண்மனை காலியாக இருந்தது. தேவர்களின் அரண்மனைகள் அனைத்தும், எவரும் இல்லாமல் வெறிச்சோடிக் கிடந்தன. இந்திர லோகத்தின் தெருக்களில் ஆள் நடமாட்டமே இல்லை.

'இது என்ன! ஊரே காலியாக இருக்கிறதே!' என்று நாரத மகரிஷிக்கு ஒரே வியப்பு.

எவரையானும் கேட்கலாமென்றால் எவரும் கண்ணில் படவில்லை. 'சரி, மகரிஷிகளின் ஆஸ்ரமங்களிலாவது கேட்டுப் பார்ப்போமே' என்று முனி புங்கவருடைய ஆஸ்ரமங்களைச் சென்று பார்த்தார். அங்கும் அதிர்ச்சி அவருக்கு. ஒருவரையும் காணோம். சதா ஜ்வாலை விட்டு எரிந்து கொண்டிருக்கும் ஹோமகுண்டங்கள் அனைத்தும் காலியாகவே கிடந்தன. அவருக்கு ஒன்றுமே புரியவில்லை. எங்கு போயிருப்பார்கள்? அதுவும் ஒரே சமயத்தில் இத்தனை பேரும்?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அப்பொழுதுதான் அவர் கண்களில் பட்டான் ஒரு கந்தர்வன். அவன் கூட எங்கோ வேகமாக தலைதெறிக்க ஓடிக் கொண்டிருந்தான். அவனை வழிமறித்தார் நாரதர். ''எங்கே இவ்வளவு அவசரமாகப் போகிறாய்? என்ன ஆயிற்று, இந்திரனுடைய இந்த உலகத்திற்கு?'' என்று கேட்டார். மூச்சு இறைக்க அந்தக் கந்தர்வன் ''திரிலோக சஞ்சாரியான நாரதரே! இந்த விஷயம் உமக்கு எப்படித் தெரியாமல் போய்விட்டது. கோகுலத்தில் அழகுச் சிறுவனான கண்ணன் விளையாடிக் கொண்டிருக்கிறான். அவனது லீலைகளைக் கண்டு களிப்பதற்காக அனைத்து தேவர்களுடன் இந்திரன் கோகுலத்தில் இருந்து கொண்டு இந்த பரமானந்த காட்சிகளில் திளைத்துக் கொண்டிருக்கிறான். நானும் இப்போது அங்கு தான் விரைந்து கொண்டிருக்கிறேன், வழியை விடு.'' என்று கூறிக் கொண்டே பூவுலகை நோக்கிப் பறந்து சென்றான்.

மேலும் வியப்பு மேலிட்டது நாரத மகரிஷிக்கு. நாமும் தான் போய்ப் பார்ப்போமே என்று விண்ணுலகிலிருந்து இம்மண்ணுலகுக்கு இறங்கினார். அவரது திருவடிகள் கோகுலத்தில் பதிந்தன. வீதி வீதியாக சுற்றி வந்தார். அங்கு ஒரு வீட்டில் பிறர் காணா வண்ணம், மாயையினால் தங்களை மறைத்துக் கொண்டு இந்திரன், இந்திராணி மற்றும் வருணன், வாயு, அக்னி போன்ற தேவர்களும் அந்த வீட்டினுள் எட்டிப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டார். தனது மாயா சக்தியினால் நாரதர் தன்னை மறைத்துக் கொண்டு தாமும் அந்த வீட்டினுள் எட்டிப் பார்த்தார்.

அங்கு அவர் கண்ட காட்சி அவரை மெய் சிலிர்க்க வைத்தது. கண்களில் தாரை தாரையாக கண்ணீர் பெருகி

ஓடியது. வீணையை மீட்டி வேத கானத்தினால் இறைவனை துதிக்கும் அவரது இருகரங்களும் தாமாகவே அவர்கள் தலைக்கு மேல் எழும்பி வணங்கின.

அப்படி நாரத மகரிஷியையும், இந்திராதி தேவர்களையும் மெய் சிலிர்க்க வைத்த அந்தக் காட்சி தான் என்ன?

எந்த அகிலங்கள் அனைத்தும் போற்றி துதித்து வணங்கும் பரம் பொருளின் திருவடிகளைக் காண்பதற்கு சனகாதி மகரிஷிகளும் கல்ப கோடி காலம் கடுந்தவம் இயற்றுகின்றார்களோ....

எந்தப் பிரபுவினுடைய திவ்ய சரண விந்தங்களை அண்ட சராசரங்களிலும் உள்ள உத்தமர்களும், தூய மனதினரும், பக்தர்களும், ஞானிகளும், மகரிஷிகளும், மகாபுருஷர்களும், சதா தங்கள் இதயத்தில் அமர்த்தி பூஜித்து வருகின்றார்களோ....

எந்த ஸ்ரீமத் நாராயணனின் திருவடிகளை நினைத்தால், ஆயிரம் ஆயிரம் பிறவிகளில் செய்துள்ள பாவங்கள் அனைத்தும் சூரியனைக் கண்ட பனி போல் ஒரு நொடியில் மறைந்து விடுமோ...

எந்த ஐயனுடைய திருவடி சக்தியினால் சூரியனும், சந்திரனும், எண்ணற்ற அகிலங்கள் வானில் தாழாமல் நிலை நிற்கின்றனவோ...

எந்த எம்பெருமானின் திருவடிகளை பூஜித்து, குபேரனும், நவநிதிகளைப் பெற்று அவற்றிற்கு நாயகனாய் விளங்குகின்றாரோ....

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரயை கால வெள்ளத்தில் சர்வலோக நாயகனை எந்த பிரபு ஆலின் இலைமேல் அழகான பாலகனாய், ஞாலம் ஏழும் உண்டு காத்தருள் புரிகின்றானே....

அந்த சர்வ அந்தர்வியாபியான (எங்கும் நிறைந்தவன்) அந்த வைகுண்டபதி கண்ணன் என்ற பேரழகு குழந்தையாக யசோதையின் கால்களைக் கட்டிக் கொண்டு, குப்புறக் கவிழ்ந்து, யசோதையின் கைகளினால் நீராடிக் கொண்டிருந்தான்.

நாரதரின் கண்களை அவரது கண்ணீர் மறைத்தது. ஆசைகளையெல்லாம் அடக்கி, மனைவி, மக்கள், மனை, சுற்றம் என்று அனைத்தையும் துறந்து, அக்கினியின் மத்தியில் ஒற்றைக் காலில் நின்று கடுந்தவம் இயற்றியும் கிடைக்காத இத்தகைய அரும்பெரும் பேறு இந்த எளிய யசோதைக்கு எவ்விதம் கிடைத்தது?

கண்ணனின் திருவடிகளைக் காணவும், கட்டிக் கொள்ளவும் அல்லவா யாவரும் ஏங்குவார்கள்?

இங்கோ! கண்ணன் அல்லவா யசோதையின் கால்களைக் கட்டிக் கொண்டு இருக்கிறான். இந்த தலைகீழ் மாற்றம் எவ்விதம் ஏற்பட்டது? யசோதை செய்த புண்ணியம்தான் என்ன? அந்த கோகுலம் என்ற எளிய சிறு கிராமம் செய்த புண்ணியம் தான் என்ன?

நாரதர் மன்ம் சிந்தனையில் ஆழ்ந்தது ஒரு கணம்! விடையும் கிடைத்தது அவரது வினாவுக்கு.

யசோதையும், கோகுல மக்களும் கண்ணனிடம் வைத்த பக்தி என்ற சக்தியே அதற்குக் காரணம் என்பதை நாரதர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உணர்ந்தார். என்றுமே பகவான் பக்தர்களுக்குக் கட்டுப்பட்டவன். பக்திக்குத் தன்னை அடிமையாக்கிக் கொண்டவன்.

ஈரேழு பதினாலு உலகெங்கிலும் காணக் கிடைக்காத தூய்மையான பக்தியை - எளிய ப்ரேமியை அந்தக் கோகுலத்தின் மக்களிடம் கண்டான் கண்ணன். எதற்கும் வசப்படாத - வசப்படுத்த முடியாத அந்த புருஷோத்தமனை, தங்களது எளிய, தூய்மையான, முழுமையான பக்தியினால் கட்டிப் போட்டுவிட்டார்கள். கோகுலத்தின் கோபியர்கள் வாசலில் சாணம் தெளித்துக் கோலம் போடும் போதும், பால் விற்கும் போதும், தயிர் கடைந்து வெண்ணெய் எடுக்கும் போதும் கோபாலா, கோவிந்தா, கிருஷ்ணா என்றே கூவுவார்கள் கோகுலத்தில்.

கோகுலத்தை விட்டு அகல மனமில்லாத நாரதர், தான் கண்ட கண்ணனின் பேரழகினை தன் இதயத்துனுள் இறுத்திக் கொண்டு தேவர் உலகம் திரும்பினார்.

அவர் மனம்,
கொண்டல் வண்ணனைக் கோவலனாய்
வெண்ணையுண்ட வாயன்
என்னுள்ளம் கவர்ந்தானை
அண்டர் கோன் அணி அழகன்
என் அமுதனைக் கண்ட கண்கள்
மற்றொன்றினைக் காணாவே

என அரற்றியது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காமதேனு கரம் நீட்டிக்காத்த அந்த ஒரு வினாடி....!

1972-ம் ஆண்டு! மாலை 6.30 மணி. மந்த்ராலயம் இரயில் நிலையம். அப்பொழுது அந்த இரயில் நிலையத்திற்குப் பெயர் ''துங்கபத்திரா ஸ்டேஷன்''.

அந்தி மயங்கும் மாலை நேரம், இருள் கவிய ஆரம்பித்து விட்டது. பக்கத்தில், பாரத புண்ணிய பூமியின் ஜீவ நதிகளில் ஒன்றான துங்கபத்திரா, சல சலவென ஓடிக்கொண்டிருந்தாள். காலம் காலமாக தனது தூயப் பெருநீரால் நில வளத்தையும், நீர் வளத்தையும் வாரி வழங்கும் அவள், காலத்தைப் பற்றிக் கவலைப்படாமல், வழக்கம்போல் துள்ளி ஓடிப் பிரவகித்துக் கொண்டிருந்தாள்.

அதோ! சிறிது சிறிதாகக் கவிந்து வரும் மாலை இருளில், அந்த துங்கபத்திரா நதியின் இரயில் பாலத்தின் மீது, தண்டவாளங்களுக்கு இடையில் ஒரு சிறு குடும்பமே நகர்ந்து கொண்டு இருக்கிறதே!

இரு தண்டவாளங்களுக்கும் இடையில் உள்ள ''ஸ்லீப்பர்'' மரக்கட்டைகள் மீது எச்சரிக்கையுடன், அடி மேல் அடி வைத்து, அவர்கள் சென்று கொண்டிருந்தனர். கணவர், மனைவி, அவர்கள் இருவரின் இடுப்பிலும் தலா ஒரு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குழந்தை. அவர்களுக்குச் சற்று முன்னால், அவர்களது எச்சரிக்கையுடன் மூன்று குழந்தைகள், அந்த இரயில் தண்டவாளக்கட்டைகளை ஒவ்வொன்றாகத் தாண்டி, கடந்து கொண்டிருந்தனர்.

ஆங்கிலேயர்கள் காலத்தில், அவர்களால் கட்டப்பட்ட, மிக உயர்ந்த பாலம் அது. (இன்றும் அதனைப் பார்க்கலாம்).

அந்தப் பாலத்தைக் கடந்தவுடன் இருந்த மந்த்ராலயம் இரயில் நிலையத்தை அடைவதற்காகவே அவர்கள் அந்தப் பாலத்தை, அடி அடியாகக் கடந்து கொண்டிருந்தனர். அவர்கள் அனைவரின் உள்ளங்களிலும் அந்த மந்த்ராலய மகானான, ஸ்ரீராகவேந்திரா ஸ்வாமிகளே நிறைந்திருந்தார்.

அப்போதுதான், நெஞ்சை உறைய வைக்கும் அந்த விபரீதம் நிகழ்ந்தது. எதிர் திசையிலிருந்து, மிக வேகமாக கூட்ஸ் வண்டி ஒன்று, அந்தப் பாலத்தின் மீது வந்து கொண்டிருந்தது. அடி அடியாக நகர்ந்து கொண்டிருந்த அந்த சிறு குடும்பம், நிலை குலைந்து, திகிலுடன் செய்வதறியாது நின்று விட்டது. ஒவ்வொரு வினாடியும், மரணம் அவர்களை - ஆம்! அந்தப் பிஞ்சு குழந்தைகளையும் சேர்த்துத்தான் நெருங்கிக் கொண்டிருந்தது. வெகு வேகமாக, எந்த நிமிடமும், அந்தக் குழந்தைகளுடன், அக்குடும்பமே அந்த கூட்ஸ் எஞ்சினில் அரைபட்டு, அடையாளம் தெரியாமல், சிதைந்து போய்விடும் என்ற நிலை. கீழே, ஆற்றில் குதிக்கவும் முடியாது. உயர்ந்த பாலம் அது. அதற்கு நேரமும் இல்லை.

அந்த சின்னஞ்சிறு குழந்தைகள் உள்பட, அனைவரும், தங்களையும் மறந்து, ''ராகவேந்திரா'', ''ராகவேந்திரா'' என்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கூவினார்கள் - தங்கள் நிலைகுலைந்து. இரயிலில் அடிபடுவதற்கு முன்பு, அந்த மகானின் நாமத்தை உச்சரித்து விடுவோம் என்று நினைத்துவிட்டார்களோ!

கொடிய இதயத்தையும் ஒரு கணம் நிறுத்தி வைக்கும் அந்த வினாடியில்தான் அந்த அற்புதம் நிகழ்ந்தது. கருத்தையும், கற்பனையையும் மீறிய தெய்வீக அதிசயம் - ஆச்சரியம் அது. ஒவ்வொரு வினாடியும், ஒரு யுகமாகத் தோன்றிய - இதயமே நின்று விடும் அந்த ஒரு க்ஷண நேரத்தில் இருண்ட வானில் தோன்றி மறையும் கொடி மின்னலைப் போன்று நிகழ்ந்த பேரதிசயம் அது.

அந்தக் குடும்பம், பாலத்தின் மேல் நின்று கொண்டிருந்த இடத்தில் ஸ்ரீராகவேந்திரரின் திருக்கரம் தெரிந்தது. அந்த இருட்டில் அம்மகானது காவி வஸ்திரமும் தெரிந்தது.

அடுத்த வினாடி, அந்த திருக்கரம், இரயில் தண்டவாளத்தில் வேலை செய்யும் கூலி ஆட்கள் (கேங் மேன்) ரெயில் வரும் போது ஒதுங்கிக் கொள்வதற்காக , அனைத்து ரெயில் பாலங்களிலும் கட்டப்பட்டுள்ள சிறு ''பிளாட்பாரம்'' ஆக மாறியது.

தங்களையும் அறியாமல், அந்த சிறு பிளாட்பாரத்தில் அந்த கணவர், மனைவி ஒதுங்கிக் கொண்டு, மூன்று குழந்தை களையும் அதனுள் வேகமாக இழுத்துக் கொண்டனர். அவர்கள் இவ்வாறு ஒதுங்கிக் கொள்வதற்கும், அந்த கூட்ஸ் ரெயில் வண்டி அவர்களைத் தாண்டிச் செல்வதற்கும் சரியாக இருந்தது.

ஒரு வினாடி தாமதித்திருந்தாலும், அந்த ஏழு ஜீவன்களும், அந்த கூட்ஸ் இரயிலில் அடிபட்டு சின்னா பின்னமாகி யிருப்பார்கள்.

உடலும், உள்ளமும் நடுங்க, அந்த சிறு, மர பிளாட்பாரத்திலேயே, அவர்கள் ''தாயும், தந்தையும், குருவும், தெய்வமும், உற்றாரும், சுற்றத்தவரும், தயாநிதியான தாங்களே குரு ராஜ ஸ்ரீராகவேந்திரா'' என்று மந்த்ராலய மகானை நன்றிப் பெருக்குடன் வணங்கினர்.

மீண்டும் அடிமேல் அடி வைத்து, அந்த இருட்டில் அந்த ரயில் பாலத்தைக் கடந்து, மந்த்ராலயம் ரயில் நிலையத்தை அடைந்தனர். அவர்கள், அன்றிரவு சென்னைக்கு வரும் இரயிலைப் பிடித்து, மறுநாள் சென்னை திரும்பினர். கருணைக் கடலான ஸ்ரீராகவேந்திரப் பிரபுவின் எல்லையற்ற அனுக்கிரகத்தினால் அந்தக் கணவர், மனைவி, ஐந்து குழந்தைகள் உயிர் பிழைத்தனர். இந்தக் கணவரும், மனைவியும், குழந்தைகளும் யார் என்று நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டாமா?

இன்று, தமிழக மக்களின் பேரன்பைப் பெறும் பாக்கியம் செய்துள்ள, உங்கள் பிரேமைக்கு பாத்திரமாக, உங்கள் இதயத்தில் இடம் பெற்றுள்ள ஜோதிடச் சக்கரவர்த்தி ஏ.எம். ராஜகோபாலனும், அவர் மனைவியும், குழந்தைகளும்தான் இவர்கள்.

அன்பும், பண்பும், ஆன்மீகமும் நிறைந்த தமிழக மக்களுக்கு ஜோதிடக் கலையின் மூலம், இன்று இலவசமாக சிறு ஆன்மீகப் பணியை ஆற்றுவதற்காகவே, 31 ஆண்டுகளுக்கு முன்பு அன்று மந்த்ராலய மகானால் உயிர் காப்பாற்றப்பட்டார் என் கணவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீராகவேந்த்ர ஸ்வாமிகள், அவரை நம்பிச் சரணமடைந்தவர்களைக் காப்பதில் காமதேனுவாகவும், கற்பகத் தருவாகவும் திருவருள் பாலித்து வருகிறார். அவரது க்ருணை எல்லையற்றது.

அன்றும் இன்றும் என்றும் நம் அனைவருக்கும் உயிரும், உற்ற துணையும் ஸ்ரீராகவேந்திரரே. தன்னிடம் வரும் பக்தர்களுக்கு ''இல்லை'' என்று அவர் சொன்னது இல்லை. அந்த பிரபுவை பூஜித்து, துன்பங்கள் நீங்கி, நல்வாழ்வு பெறுவோம் நாம் அனைவரும்.

''ராகவேந்திரா'' என்றாலே எத்தகைய சக்தி ஏற்பட்டு விடுகிறது தெரியுமா? இதோ நமது ஆன்றோர்கள் கூறியது:-

''ராயெந்து நொடிதரே ரக்ஷணமாடுவா''. ரா என்ற அந்த க்ஷணமே ஓடி வந்து நம்மை காப்பாற்றுவார் அவர்.

''காயெனலு சர்வ பயஹரவே.'' ''க'' என்றதுமே நம்முடைய அனைத்து பயமும் நீங்கி விடும்.

''வே'' யெனலு - வியாதிகள் அனைத்தும் பறந்து ஓடிவிடும்.

''த்ராயந்தரே'' சர்வ திரவியலாபமு'' - வறுமை ஒழிந்து அஷ்ட ஐஸ்வர்யமும் தேடி வரும்.

ஆதலால்தான் ''ஸ்ரீராகவேந்த்ராய நம:'' என்ற தாரக மந்திரம் நமக்கு என்றும் துணை இருக்கும்.

''பூஜ்யாய ஸ்ரீராகவேந்த்ராய சத்ய தர்ம ரதாயச
பஜதாம் கல்பவிருட்சாய நமதாம் காமதேனுவே:''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாழ்க்கைக்கு ஒளிதரும் தீப ஒளிப்பண்டிகை...!

தற்காலத்தில், பலரிடமும், முக்கியமாக இளைஞர்களிடம் மிகவும் சகஜமாக ஒரு சொல்லைக் கேட்பது வழக்கமாகிவிட்டது. அது என்ன சொல் என்று கேட்கிறீர்களா? சொல்கிறேன். ''போர் அடிக்கிறது'' என்பதே அந்தச் சொல். அது என்ன போர் அடிக்கிறது? அதாவது வாழ்க்கை அலுப்புத் தட்டுகிறது இந்த இளவயதிலேயே என்பதுதான் அதற்கு அர்த்தம்.

இவ்விதம் என்றோ ஒருநாள், அவரவரது மனநிலைக்கு ஏற்ப, வாழ்க்கையில் அலுப்பும், சோர்வும் ஏற்பட்டுவிடும் ஏதோ ஒரு காரணத்தினால் என்ற உண்மையை நமது பாரதப்புண்ணிய பூமியின் மகான்களும், மகாபுருஷர்களும் அறிந்து இருந்தனர். இவ்விதம் வாழ்க்கையில் அலுப்புத்தட்டுவது இளம் உள்ளங்களைப் பாதித்துவிடும் என்பதையும் அவர்கள் உணர்ந்திருந்தனர்.

இதனைக் கருத்தில் கொண்டே ஆன்மீகத்தையும், பொழுது போக்கையும், உல்லாசத்தையும் ஒன்று கலந்து பல பண்டிகைகளாக அவர்கள் ஏற்படுத்தினர். ஒவ்வொரு மாதத்திற்கும், ஆன்மீக ரீதியில் ஒவ்வொரு புனிதம் உண்டு.

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்தப் புனிதம் அனைத்தும் வானில் உலாவரும் கிரகங்களின் சுழற்சிகளை அடிப்படையாகக் கொண்டவை ஆகும். நமது தமிழ்ப் புத்தாண்டு, சூரியன் மேஷராசியில் வந்து உச்ச கதியை அடையும் போது, சித்திரை மாதம் பிறக்கிறது. சித்திரை முதல் அடுத்து வரும் பதினோரு மாதங்களும் ஒவ்வொரு தனித்தனி ஆன்மீகச் சிறப்பினைப் பெற்றுள்ளன.

இவற்றின் அடிப்படையில்தான் மகரசங்கராந்தி (பொங்கல் பண்டிகை) போன்ற பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன. இதேபோன்று அவதார புருஷர்களின் ஜனன நாட்களும் பண்டிகை நாளாகக் கொண்டாடப்படுகின்றன. வருடந்தோறும் இவ்விதமாக விநாயகர் சதுர்த்தி, கோகுலாஷ்டமி, ஸ்ரீராமநவமி, நரசிம்ம ஜெயந்தி, ஆடிப்பண்டிகை, புரட்டாசி திருப்பதி விரதம், நவராத்திரி என்று அடுக்கடுக்காக பண்டிகைகள் வரும்போதெல்லாம் வீடுகளில் விருந்தும், உற்சாகமும், உறவினர் வருகையால் வீடே புத்துணர்ச்சி பெற்று குழந்தைகள் முதல் பெரியோர் வரை மகிழ்ச்சியில் திளைக்கின்றனர்.

வாழ்க்கை அலுப்புத்தட்டாமல் மனதிற்கு ஒரு ''டானிக்'' போன்று தெம்பை அளிக்கிறது இப்பண்டிகைகள். தற்கால இளைஞர்களுக்கு இத்தகைய பண்டிகைகள் ஆர்வம் இல்லாது போய்விட்டதால், வாழ்க்கையில் அலுப்புத்தட்டி ''போர்'' அடிக்கிறது என்று கூறுகிறார்கள். இந்தப் பண்டிகைகள் தனிச் சிறப்பு பெற்று தேசிய பண்டிகை என்று ஏற்றுக் கொள்ளும் அளவிற்கு உயர்ந்துவிட்டது.

புராணத்தில் தீபாவளி

நமது புராதன நூல்களில் தீபாவளிப் பண்டிகையின் ஆன்மீகப் பின்னணி கூறப்பட்டுள்ளது.

ஸ்ரீ மஹா விஷ்ணுவிற்கும், பூமி தேவிக்கும் மகனாகப் பிறந்தவன் நரகன். அந்தப் பரமபுருஷனுக்கே மகனாகப் பிறந்தும், விதி வசத்தினால் அசுரகுணம் கொண்டவனாக வளர்ந்தான். தர்மத்தை அழித்து, அதர்மமே தர்மம் என்று நிலைநாட்ட முயன்றான். அம்முயற்சியில் அடாத செயல்களைச் செய்தான்.

எதற்கும் அஞ்சாத அசுரர்கள், ஒன்றை மட்டும் கண்டு நடுங்குவார்கள். ''மரணம்'' என்பதே அது. ஆதலால், மரணம் ஏற்படாமல் இருக்கும் உபாயத்தைப் பெறுவதற்காக, அடிக்கடி கடும் தவம் செய்வதுண்டு. ஆனால், அம்முயற்சியில் ஒவ்வொரு முறையும் அவர்கள் தோற்றே போனார்கள். ஹிரண்ய கசிபு என்ற அசுரனும் அவ்வாறு முயற்சி செய்து, இறுதியில் தோற்றுப் போனான்.

இப்போது, நரனும் இதே முயற்சியில் இறங்கினான். அசுரர்கள் அறிவில் சிறந்தவர்கள். நரனும் கெட்டிக்காரன்தான். மரணம் ஏற்படாமல் இருக்கும் வரத்தை ஸ்ரீபரமேஸ்வரனும், ஸ்ரீசதுர்முகப் பிரம்மனும், ஸ்ரீமகாவிஷ்ணுவும் மறுத்து வந்தனர். ஆதலால் மரணத்தைத் தவிர்க்கும் வரங்களைக் கேட்டுப் பெற்றனர்.

நரனும் யோசித்தான். உலகில் எவரைக் கொல்ல மனத்துணிவு பெறமுடியாதோ, அவரால் மட்டுமே தனக்கு மரணம் ஏற்பட வேண்டும் என்று வரம் வேண்டித்தவம்

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செய்தான். அப்படிப்பட்டவர் யாராக இருக்க முடியும்? பெற்ற தாய்தான்!

ஆதலால், தனக்கு மரணம் ஏற்படவேண்டும் என்றால், தன்னைப் பெற்ற தாயினால் மட்டுமே நேரிடவேண்டும் என்ற வரத்தைப்பெற்றான் - கடும் தவத்தினால். எந்தத் தாயாவது, மனம் வந்து, தான் பெற்ற மகனையே கொல்வாளா? தாய் அன்பின் வலிமையை உணர்ந்து கொண்ட நரன், தனக்குத் தனது தாயினால் மட்டுமே மரணம் ஏற்பட வேண்டும் என்று தந்திரமாக வரம் பெற்றுக் கொண்டான். ஆனால், அவனைவிட சாதுர்யத்தில் உயர்ந்தவன் அல்லவா இறைவன்! தன்னுள் சிரித்துக் கொண்டான் எம்பெருமானும் - நரனின் அறியாமையை நினைத்து!!

மரணத்தையே வென்றுவிட்டதாக இறுமாந்திருந்த நரன், அட்டூழியச் செயல்களில் ஈடுபட்டான். நல்லவர்களைத் துன்புறுத்தினான். என்று நல்ல இதயங்களை ஒருவன் வருந்தும்படிச் செய்கிறானோ அன்றே அழிவிற்கு அவன் அச்சாரம் கொடுத்துவிட்டான் என்பது உறுதி. இறைவனை நிந்தித்தாலும் பரவாயில்லை. ஆனால், இறைபக்தி கொண்டவர்களைத் துன்புறுத்தினால், அந்த இறைவன் பொறுக்கமாட்டான்.

''இனி பொறுக்க முடியாது'' என்று சாதுக்கள் மனம் வருந்தும் அளவிற்குத் தன் தீச்செயல்களில் இறங்கி விட்டான் நரன். நரகாசுரனின் அட்டூழியங்கள் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே போயின. அதனால், அதர்மம் உயர்ந்து, தர்மம் தாழ்ந்தது. இத்தகைய நிலை ஏற்படும்போதுதான், பகவான்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தர்மத்தைப் பாதுகாப்பதற்காகத் தானே நேரில் எழுந்தருளி விடுகிறான். அல்லது, சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு அதர்மத்தை அழித்து, தர்மத்தைக் காப்பாற்றி விடுகிறான்.

இப்பொழுதும், நரகாசுரனிடமிருந்து சாதுக்களைக் காப்பாற்றுவதற்காகத் தனது ரதத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

எம்பெருமானுக்கு "சர்வ அந்தர்யாமி" என்ற பெருமை உண்டு - அதாவது, எங்கும் நிறைந்தவன் எதையும் அறிந்தவன் என்ற பொருள் அதற்கு! நரகன், கேட்டுப் பெற்றிருந்த வரத்தைக் கண்ணன் அறிவான். தன் தாயினால் மட்டுமே அல்லவா தான் மரணமடைய முடியும் என்றல்லவா வரம் பெற்றிருந்தான் அந்த அசுரன்!

கண்ணன் உதடுகளில் அர்த்தம் நிறைந்த புன்னகை ஒன்று தவழ்ந்தது. பார்த்தனின் சாரதிக்கு சாரதி ஆனாள் சத்தியபாமா!

கண்ணன் தன் ரதத்தில் ஏறிக்கொண்டவுடன், தானும் உடன் வருவதாகக் கூறி, ஏறிக்கொண்டாள் சத்தியபாமா, ரதத்தைக் கண்ணனே ஓட்டி வந்தான் ஆரம்பத்தில். கண்ணனுக்கும் நரகனுக்கும் கடும் போர் நிகழ்ந்தது. அதில் ஒரு சக்தி வாய்ந்த அஸ்திரத்தை கண்ணன் மீது ஏவினான் நரகன். அதனால் அடிபட்டு மூர்ச்சித்து, ரதத்தின் உள்ளேயே விழுந்தான் கண்ணன். (மூர்ச்சித்து விழுவது போல பாவனை செய்தான் என்பதே உண்மை)

கண்ணன் அடிபட்டதைக் கண்ட சத்தியபாமை வெகுண்டாள். யுத்த தந்திரங்கள் அனைத்தும் பயின்றவள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவள். சாதுர்யமாக ரதத்தை வேகமாக ஓட்டியபடியே நரகனை எதிர்த்தாள். நரகனுக்கும் புரிந்துவிட்டது விதி விளையாடிய அந்த ரகசியம்! தன் இறுதி நேரம் வந்துவிட்டதை உணர்ந்து கொண்டான் அவன், தாயின் கையினால் மடிவதை விட மகன் பெறும் பேறும் உண்டோ? தாயைக் கடுமையாக எதிர்ப்பது போல், சண்டையிட்டான். சீற்றம் கொண்ட சத்தியபாமையும் சக்தி வாய்ந்த அஸ்திரம் ஒன்றை அவன் மேல் செலுத்த, மார்பு பிளந்து கீழே வீழ்ந்தான்.

வீழ்ந்தவன், இருகரம் கூப்பித் தாயைத் தொழுதான். தன் மகனே அந்த நரன் என்பதை உணர்ந்து, சத்தியபாமை உள்ளம் வருந்தினாள். கண்ணன் தேற்றினான், நரகன் நற்கதி அடையப் போவதை விளக்கினான்.

நரகன் பேசினான் - மரண வேதனையுடன். இரு கரமும் கூப்பி, மன்னிக்கும்படி வேண்டினான். தான் கண்ணனின் இணையடிகளை அடையும் அந்தத் தினத்தை நன்னாளாக அனைவரும் புனித நீராடி நரக சதுர்த்தசி (அன்று சதுர்த்தசி திதி) ஆகக் கொண்டாட வேண்டும் என்றும், அன்று அதிகாலையில் சூரிய உதயத்திற்கு முன்பு புனித நீராடி, கண்ணனை ஆராதிப்பவர்களுக்கு கங்கையில் ஸ்நானம் செய்த புண்ணிய பலன் கிடைக்க வேண்டும் என்றும் வேண்டினான். கண்ணனும், ''அவ்விதமே ஆகட்டும்'' என்று திருவாய் மலர்ந்து அருளினான். அந்தப் புனித தினமே, நரக சதுர்ததசி அல்லது தீபாவளி நன்னாளாகக் கொண்டாடப்படுகிறது. அதர்மம் என்ற இருள் நீங்கி, தர்மம் என்ற ஒளி வீசுவதால்,. அந்தப் புனித தினத்தை ''தீப ஒளி'' (அல்லது தீபாவளி) யாகக் கொண்டாடி மகிழ்கிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தீபாவளி புகட்டும் பாடம்

அசுரர்களே ஆனாலும், அந்தக் காலத்தில் தெய்வ பக்தி நிறைந்தவர்களாக இருந்தனர். வேதங்களைப் பயின்றனர். ஆச்சார, அனுஷ்டானங்களைக் கடைப்பிடித்தனர். ஆயினும், அதர்மத்தையும் கடைபிடித்ததால் அழிந்தனர். அந்த அழிவிலும், இறைவனுடைய திருக்கரங்களால் நற்கதி அடைந்தனர்.

அன்றும், இன்றும்

அன்றும் பல மனிதர்களுக்கு இடையில் சில அசுரர்கள் இருந்தனர். இன்றோ, சில மனிதர்களுக்கு இடையில் பல அசுரர்கள் இருந்து வருகின்றனர். அன்று அசுரர்களுக்கு இருந்த தெய்வ பக்தி, இன்றைய அசுரர்களுக்கு இல்லை. பேராசை, அகங்காரம், ஒழுக்கமின்மை என்று மனித சமுதாயமே மாறிவிட்டது இன்று. அதர்மமே தர்மம் ஆகிவிட்டது. பாவமே புண்ணியம் என்றாகிவிட்டது. 'நானே இறைவன்' என்று முழங்கும் அளவிற்கு மனிதனின் ஆணவம் மேலோங்கி நிற்கிறது இன்று. அசுரனாக இருந்தும், தன் தாயின் கையினால் ஜென்ம சாபல்யம் பெற்றதினால், தீபாவளி தினத்தை துக்க தினமாகக் கருதாமல், புண்ணிய தினமாக, இறைவனை பூஜித்து புனிதமும், மகிழ்ச்சியும் அடைய வேண்டும் என்று வரம் வேண்டினான் நரகாசுரன்.

அந்தப் புண்ணிய தினத்தை மேலும் புனிதமாக்க, பரம பவித்ர நதியான கங்கையும் ஒவ்வொரு வீட்டிற்கும் தானே எழுந்தருளி, காலையில் தீர்த்தமாடிய புண்ணிய பலனைத் தந்தருள்கிறாள் - அதுவும் உஷத் காலமான அந்த அதிகாலை நேரத்தில்.

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தீபத்தின் அபார சக்தியையும் நமக்கு நினைவூட்டுகிறது. தீப ஒளியான தீபாவளித் திருநாள். குத்து விளக்கின் ஐந்து முகங்களும், பஞ்ச (ஐந்து) இந்திரியங்களைக் குறிக்கிறது. தீபத்தைப் போல், நாம் ஐந்து இந்திரியங்களையும் கட்டுப்படுத்தி தூய்மையாக வைத்துக் கொண்டோமானால், நம் வாழ்வும் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும்.

நமக்கு உள்ளத் தூய்மையையும், உடல் தூய்மையையும் ஒரே சமயத்தில் அளிக்கும் இந்தத் தீபாவளித் திருநாள் உண்மையிலேயே ஒளி தரும் திருநாள்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குன்றில் அமர்ந்து குறை தீர்க்கும் குமரன்

இந்தியாவிற்குப் பெருமை இமயம்!

இதை நான் கூறவில்லை. புகழ் பெற்ற இதிகாச ரத்தினம் என்று ஆன்மீக உலகம் போற்றும் ஸ்ரீமத் ராமாயணம் கூறுகிறது.

"உலகில் பாரததேசம் உயர்ந்தது. ஏனெனில் அதில் தான் இமயமும், மானஸ ஸரோவர் தீர்த்தமும் உள்ளன."

- ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

இன்றைய சீனாவின் ஆதிக்கத்தில் உள்ள திபெத் ஒரு காலத்தில் பாரத புண்ணிய பூமியின் பகுதியாக இருந்தது. அங்குதான் உள்ளது கைலாயமும், மானஸ தடாகமும். இவற்றை தரிசிப்பது பல பிறவிகளில் கிடைத்தற்கரிய பேறாகும். அந்த தடாகத்தின் கரையில் தான் உள்ளது மகத்தான புண்ணிய சிகரமான மாந்தாதா மலை. சூரிய வம்ச அரசனும், ஸ்ரீராம பிரானின் மூதாதையருமான மாந்தாதா தவம் இயற்றி முக்தி அடைந்த இடம். ஆதலால், அவரது பெயரே அந்தப் புனிதமான மலைக்கும் நிலைத்துவிட்டது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உலகில் அதர்மம் ஓங்கி, தாமம் பலஹீனம் அடையும் போது, அதர்மம் செய்பவர்களை அழித்து, தர்மத்தை நிலை நாட்ட, இறைவன் அவதரிக்கிறான். தானே வர வேண்டிய அவசியம் இல்லாத தருணங்களில், தனது சக்தியை சில அவதார புருஷர்களுக்கு அளித்து, தர்மத்தைக் காப்பாற்றுகிறான்.

அவ்விதம்தான், ஒரு சமயத்தில் சூரபத்மன் என்ற அசுரன், தவம் செய்து, பல வரங்களைப் பெற்று தேவர்களையும், மகரிஷிகளையும் கொடிய துன்பங்களுக்கு ஆளாக்கி வந்தான். இந்திர லோகத்தைக் கைப்பற்றி, தேவர்களை விரட்டினான். பக்தர்களை வெட்டிச் சாய்த்தான். அவன் செய்யும் கொடுமைகள் சகிக்காமல், இந்திராதி தேவர்கள் கருணையே உருவான பரமேஸ்வரனை சரண் அடைந்தனர்.

பக்தர்கள் படும் துயரைக் கேட்டு அளவற்ற சினம் கொண்டான் சிவபெருமான். அப்போது அவனது நெற்றிக் கண்ணிலிருந்து ஆறு தீப்பொறிகள் பறந்து மாந்தாதா மலை அடிவாரத்தில் உள்ள பொய்கையில் விழுந்தன. (அந்தப் பொய்கையை இன்றும் கண்டு தரிசிக்கலாம்.)

இதுவே சரவணப் பொய்கை எனப்படுகிறது. நக்கீரர் தொழுநோயுடன் வந்து இக்குளத்தில் நீராடி நோய் தீர்ந்தது.

அவ்விதம் விழுந்த ஆறு தீப்பொறிகளும் அழகிய தேஜஸ்சுடன் (ஒளி) கூடிய ஆறு குழந்தைகளாக மாறின. அந்த ஆறு குழந்தைகளையும் ஆறு கர்த்திகைப் பெண்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எடுத்து, அணைத்து, பாலூட்டி வளர்த்தனர். அதனால் கார்த்திகேயன் எனப்பெயர் பெற்றான். அகிலாண்ட நாயகியான அன்னை பார்வதி, அந்த ஆறுகுழந்தைகளையும் ஆசையுடன் அணைக்க, ஆறுமுகங்கள், பன்னிரு கைகளுடன் ஒன்று சேர்ந்து, ஒரு சரீரமாக மாறினான் அந்த தெய்வீக சிறுவன் ஆறுமுகன்.

வைகாசி விசாகத்தன்று அவதரித்ததால் விசாகன் என்றும், ஈடிணையற்ற அழகனான இருந்ததால் முருகன் என்றும், சரவணப் பொய்கையில் தோன்றியதால், சரவணபவன் என்றும், ஆறுதிருமுக மண்டலங்களால் திகழ்ந்ததால் ஆறுமுகன் - ஷண்முகன் என்றும், பிறவி பிணி அறுப்பவன் ஆதலால் முருகன் எனவும் பெயர் பெற்று வளர்ந்தான் இத்தெய்வக் குழந்தை.

அவனது அவதாரத்தின் நோக்கத்தை அம்மையப்பன் அறிவான்.

சூரபத்மனின் அக்கிரமங்கள்

இதற்கிடையில், சூரபத்மனின் பலமும், அத்துடன் அவனது அட்டூழியங்களும் நாளுக்கு நாள் அதிகரித்து வந்தன. அவன் அழியும் காலமும், நேரமும் நெருங்கிக் கொண்டிருந்தது.

''அரசன் அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும்'' என்ற முதுமொழிக்கு இணங்க, தெய்வம், சூரபத்மனின் காலத்திற்காகக் காத்திருந்தது. தர்மம் அழிந்து, அதர்மம் வெற்றி பெற்று விடுமோ என்று அனைவரும் அஞ்சினர். திருச்செந்தூர் தர்மத்தை காத்தது, கந்தப்பெருமானின் மூலம். திருச்செந்தூர் செல்வோம்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆர்ப்பரிக்கும் அலைகள் முருகன் திருவடியில் அடங்கி ஒடுங்கி வந்து வருடுவதால் திருச்சீரலைவாய் என்றும், சூரபத்மனை வென்றதால் ஜெயந்திபுரம் என்றும், சிந்து என்றும் பொருள்படும். கடல் உள்ள ஊராதலால் செந்தூர் என்றும் அழைக்கப்படுகிறது. இங்குள்ள செந்திலாண்டவன் ஒரு முகம், நான்கு கரங்களுடன் நின்ற திருக்கோலத்தில் கிழக்கு நோக்கி விளங்குகிறார். உற்சவமூர்த்தியான சண்முகநாதர், ஆறுமுகப் பெருமான் பன்னிருக்கைகளுடன் வள்ளி, தெய்வயானையுடன் நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். செந்தூர் முருகன் புகழை பல அருளாளர்கள் நெஞ்சுருக பாடி பரப்பினர்.

அருணகிரி நாதர் இத்தலத்தில் திருவடி தீட்சை தர வேண்டி செந்தில் வேலனை பாடினார். பழநிக்கு அடுத்தபடியாக செந்தூர் முருகனை பற்றி 83 கந்தப்பாடல்களைப் பாடியுள்ளார்.

இத்தலத்தில் தெய்வ தாயிடமிருந்து சக்தி வாய்ந்த வேலை பெற்றுக் கொண்ட கந்தப்பெருமான், அசுரன் சூரபத்மனை நேரில் எதிர்கொண்டான். அசுர சரீரம் பெற்று, பிறவி எடுத்த காரணத்தினால், எதிரில் நிற்பவன் வேதப் பொருட்களை தன்னுள் அடக்கிய அகிலாண்ட நாயகியின் தெய்வமகன் என்பதை அறிந்து கொள்ளவில்லை. முருகனை தூற்றினான். பழித்தான்.

கோடி சூரியன் ஒரே சமயத்தில் உதயமானது போல் தக தக என்று அக்னியாக ஜொலித்தான் முருகப்பெருமான். சூரபத்மனுக்கும் கந்தனுக்கும் நெடிய கடும் போர் நிகழ்ந்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒரு கணம் சூரபத்மனே வென்று அதர்மமே, தர்மத்தை அழித்து விடுமோ என்ற நிலை!

ஒரு கணம் முருகன், தன் தாய் அம்பிகையை தன் மனதில் நினைத்து வணங்கி, அவள் தந்த அந்த வேலை செலுத்தினான் சூரபத்மனை நோக்கி! குருக்ஷேத்திர யுத்தத்தில் வீரியத்துடன் பாய்ந்து சென்ற பிரம்மாஸ்திரத்தைப் போன்று நெருப்பாகப் பாய்ந்து, சூரபத்மனின் தலையைக் கொய்தது அந்த சக்திவேல்!!

தேவர்கள் பூமாரி பொழிந்தனர். தர்மம் வென்றது, அதர்மம் அழிந்தது. நல்லோர் போற்றினர், நான் மறைகள் பணியும் கந்தப் பெருமானை.

உயிர் விடுமுன் சூரபத்மன் தன் எதிரில் நின்று போராடுவது, அந்த ஆறுமுகப் பெருமானே என்பதை உணர்ந்து, மனதால் வணங்கியே போரிட்டான். கந்தன் கருணையே உருவானவன் அல்லவா! சூரபத்மன் உயிர் விட்டவுடன் சேவலாக மாறி முருகப்பெருமானின் கொடியை அலங்கரித்தான்.

சூரபத்மன் சாமானிய அசுரன் அல்ல. பல தவங்களையும், வேள்விகளையும் செய்து அளவற்ற பலம் பெற்றவன். அத்தகைய மாபெரும் அசுரனை போரிட்டு அழிப்பதென்றால் சாமானியமா அது? ஆதிபராசக்தியின் வேல் அல்லவா தேவைப்பட்டது. அந்த தேவமைந்தன் ஷண்முகப் பெருமானுக்கு! வேலைப் பெற்றுக் கொண்டாலும், போருக்கு என அணி திரட்டினான் அம்பிகை பாலன். ஆறுபடை வீடுகளையும் அமைத்துக் கொண்டான் திட்டமிட்டு - தேவர்களின் சேனாதிபதி ஆயிற்றே அவன்!

 Public domain. Digitization Muthulakshmi Research Academy

வைகாசி விசாகமும், ஆவணி பெருவிழாவும், கந்தர்சஷ்டி, மாசி பெருவிழா இங்கு நடைபெறும் முக்கிய திருவிழாக்கள். ஆவணி, மாசி பெருவிழாக்களில் மட்டும் 7 நாட்கள் சண்முகர் வீதி வலம் வருவார். ஏழாந்திருநாளில் எழில்மிகும் ஆறுமுகப் பெருமான் உருகுசட்ட சேவை முடிந்து வெட்டி வேர் நிறைந்த விண்மணி சப்பரத்தில் உலா வருவதும், அழகர் ஆறுமுகம் ஆனிப்பொன் சப்பரத்தில் செம்பட்டணிந்து, செம்மலர் சூடியும், செம்மேனியுடன் வருவதும், 8-ம் நாளன்று வெள்ளிச் சப்பரத்தில் வெள்ளுடை (வெண்மை நிறம்) அணிந்து வெண்ணிறப்பூக்களால் அலங்கரிக்கப்பட்டு வீதி உலா வருவதும், அடுத்த நாளில் பச்சைக்கடைசல் சப்பரத்தில் பச்சை பட்டாடை உடுத்தி, பச்சை இலை மற்றும் மருக்கொழுந்து மாலை அணிந்து பவனி வரும் காட்சி கண்கொள்ளாத காட்சி. சூரசம்ஹாரம் அன்று திருச்செந்தூர் கடற்பரப்பில் அலைகடலென அன்பர்கள் கூட்டம் கண்ணுக்கு எட்டும் தூரம் வரை ஆர்ப்பரித்து இறை உணர்வு கமழ கூடி நிற்கும் காட்சி இறை அற்புதத்திற்கே சாட்சி.

திருப்பரங்குன்றம்

தமிழ்க்கடவுள் முருகன் குறிஞ்சிநிலத் தலைவன். வேண்டிய வரத்தை அடியார்க்கு கொடுத்து அல்லல் தீர்க்கும் அமரர்பதி. முருகனை மனமுருகப் பாடி 'அவன் வீரத்தை வாழ்த்தி' அவன் தோற்றத்தை புகழ்ந்து அடியார்கள் பாட, கிடைத்த இலக்கிய செல்வம் திருமுருகாற்றுப்படை. அசுரனை வென்ற சுப்ரமணிய கடவுள் ஆறுவித கோலம் கொண்டு தமிழ்நாட்டில் தங்கியிருந்த இடங்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆறுபடைவீடுகள் ஆகும். திருமுருகனை புகழ்ந்து பாடும் ஆற்றுப்படையில் முதலில் திருப்பரங்குன்றம் பதியும் முருக வடிவை எழுபத்தேழு வரிகளில் எடுத்துக் காட்டுகிறார். திருப்பரங்குன்றிலே குமரக் கடவுள் வெற்றி வீரனாய் அமர்ந்துள்ளான். பிரம்மனை சிறை செய்தான். தேவர்கள் துயர் தீர்த்தவன். அதனால் தான் குற்றமற்ற தெய்வானை முருகனுக்கு பரிசாகக் கிடைத்தாள். அங்கு தான் திருமணக் கோலத்தில் காட்சியளிக்கிறார். திருப்பரங்குன்றத்தை சங்க இலக்கியம் வர்ணிக்கிறது. கல்லாடம் என்ற நூலில் வர்ணனை செய்த பல பாடல்கள் உள்ளது. திருமுருகாற்றுப் படையிலோ மதுரைக்கு அருகே விளங்கும் 'திருப்பரங்கிரி' என்கிறார். கல்லாடத்திலோ திருப்பரங்கிரியை ஒரு படி உயர்த்தி, திருப்பரங்கிரி சூழ்ந்த கூடல்பதி (மதுரை) என்கிறார்கள்.

ஆறுபடை வீடுகளில் முதலாவது திருப்பரங்குன்றம். மதுரையிலிருந்து தென் மேற்கே 8 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. மலையில் குடையப்பட்ட கோவில். சுமார் கி.பி 6-ம் நூற்றாண்டில் பல்லவர்களால் ஏற்படுத்திய குகைக்கோவில். மூலதானத்தை அடைய அநேக படிக்கட்டுகள் ஏறவேண்டியுள்ளது. கல்யாண மண்டபம், அர்த்த மண்டபம், கம்பத்தடி மண்டபம் என்னும் அமைப்புகளைக் கொண்டது. திருமுருகனின் திருஉருவம் பாறையில் குடைந்து வடிக்கப்பட்டுள்ளது.

ஒரு முகம், நான்கு கரங்கள் கொண்டு வடக்கு நோக்கி அமர்ந்த கோலத்தில், அவர் அருகில் தேவகுஞ்சரி. இவ்வரிய மணக்கோலத்தை சூரியன், சந்திரன், சித்தர், நான்முகன், இந்திரன், கலைமகள், நாரதர் முதலானோர் கண்டு போற்றி வணங்குவதை பார்க்கலாம். இவையாவும் மலையில்

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செதுக்கப்பட்டவை. மூலவருக்குக் கீழே ஆடு, சேவல், யானை, மயில் என நான்கும் வடிக்கப்பட்டுள்ளன. இவை முருகப் பெருமானின் வாகனங்கள். மூலவருக்கு அபிஷேகம் கிடையாது. வேலுக்குத்தான் சிறப்பு. எண்ணெய், புனுகு காப்பு மூலவருக்கு சாத்தப்படுகிறது. கந்தர் சஷ்டி திருவிழாவும், தையில் தெப்ப உற்சவமும் பங்குனியில் பிரம்மோற்சவமும் நடைபெறுகிறது.

சுவாமிமலை

அடுத்து சுவாமிமலை, அங்கு கலியுகவரதனாம் கந்தவேள் எந்தை சிவபெருமானுக்கு பிரணவத்தின் பொருளை உபதேசித்தருளிய தலம். சுவாமிமலை என்றும், திருவேரகம் என்றும் கூறுவர் இத்திருத்தலத்தை.

மலையே இல்லாத தஞ்சை மாவட்டத்தில் கருங்கல்லான கட்டு மலைக்கோவில் சுவாமி மலைக்கோவில் அமைந்தது அதிசயம். 60 படிகள் கொண்டது இத்திருக்கோவில். அறுபது ஆண்டுகளும் இங்கு படிகளாக அமைந்துள்ளதை இன்றும் காணலாம்.

சுவாமிக்கே நாதனாக முருகன் திகழ்வதால் சுவாமிநாதன் என்று பெயர் பெற்றார். குருபரன், குமரகுருபரன் என்ற பெயர்களும் உண்டு. ஒரு திருமுகம், இரு கரங்கள் கொண்ட சுவாமிநாத பெருமான் நின்ற கோலத்தில் பிரம்மச்சாரியாக, சக்திவேல் தரித்து, ஞானஸ்கந்தனாக கிழக்கு நோக்கி தரும் காட்சியை காண பல பிறவிகளில் புண்ணியம் பலகோடி செய்து இருக்க வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குமரன், குருவான வரலாறு

கயிலையை அடைந்த குமரன், படைப்புக் கடவுளான பிரம்மதேவனிடம் பிரணவத்தின் உட்பொருள் யாது? என வினவ, படைப்புத் தொழிலைச் செய்யும் பிரம்மனுக்கே இதன் பொருள் புரியாது இருக்கும் போது, அவரால் படைக்கப்படும் அனைத்தாலும் என்ன பயன்? எனக் கருதி, பிரம்மாவை சிறையிலிட்டார். இந்த நிலையில் சிவபெருமான் தலையிட்டு, பிரம்மதேவனுக்கு விடுதலை வாங்கித் தந்தார். தனயனின் ஆன்மீக சக்தியை உலகிற்கு உணர்த்த திருவுள்ளம் கொண்டான் வேதநாயகனான ஐயன். ஆதலால் குழந்தை குமரனை கையில் எடுத்துக் 'கொஞ்சி ''பிரணவத்தின் பொருள் தெரியுமா உனக்கு?'' என்று உண்மை பொருளை சிவபெருமான் கேட்க, உடனே குழந்தை கார்த்திகேயனும் குருவாய் அமர்ந்து, சிறிதும் தயங்காது பிரண்வ மந்திரத்தின் உட்பொருளை தந்தையின் காதுகளில் யோகத்திலிருந்து உபதேசித்தான். அதனால் இந்திராதி தேவர்களும் சுவாமிநாதன் (சுவாமியான பரமேஸ்வரனுக்கும் நாதன்) எனப் போற்றி வணங்கப்பட்டார்.

பழநி

எந்த மலை இந்த மலைக்கு ஈடாகும் என்னும் வண்ணம் புகழ் பூத்து நிற்பது அதிசயம், பழனிமலை. பொதினி மலை என்ற பெயரே மக்கள் வழக்கில் மருவி பழநி மலையாயிற்று. இங்கு எழுந்தருளியிருக்கும் அருள் திருமுருகன் தண்டாயுதபாணியாய் தனித்த கோலத்தில் காட்சி தருகிறார். பால் மணம் மாறாத பாலகன், மழித்த தலை, கோவண உடை, தடி பிடித்த கை, நீறணிந்த உடல், உருத்திராட்ச மாலையுடன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துறவியாகக் காட்சி தரக் காரணம் என்ன? என்ன? என்ன? என்று கே.பி.எஸ் அவர்களின் பாட்டு நினைவுக்கு வருகிறது. தான் விரும்பிய கனி ஒன்றை தன் அண்ணன் வினாயகன் பெற்றுவிட்டான் என்று சினமுற்ற இளவல், வெறுப்புற்று, அனைத்தையும் துறந்து, ஆண்டிக் கோலத்தில் அமர்ந்து தன்னை அண்டினோர்க்கு அருள்புரிந்து வருவதாக ஐதீகம்.

பழநிமலை 450 அடி உயரமுள்ளது. 697 படிகள் கொண்டது. இங்குள்ள மூலவர் போகர் என்னும் சித்தரால் நவபாஷாணங்களைக் கொண்டு அமைக்கப்பட்ட திருவுருவம். இது ஒரு ரசமூர்த்தம். இவரது திருமேனியில் அபிஷேகம் ஆன பொருட்களை சிறிது பருகினாலும் தீராத நோய்கள் தீரும் என்பர். சங்க காலந் தொட்டு இன்றுவரை எண்ணற்ற புலவர்கள் பழனி தண்டாயுதபாணியை பாடிப் பரவி உள்ளார்கள். அருணகிரியார் 83 நறுந்தமிழ்ப்பாக்களை நல்கி இருக்கிறார். பழநிமலை ஆண்டவருக்கு ஒவ்வொரு நாளும் நல்விழாதான். சித்திரை திருவிழா, அக்னி நட்சத்திர திருவிழா, வைகாசி விசாகம், ஆனி அன்னாபிஷேகம், ஆடிப்பெருக்கு இலட்சார்ச்சனை, கந்தர் சஷ்டி விழா, கார்த்திகை திருவிழா, தைப்பூசம், பங்குனி பெருவிழா என மாதந்தோறும் முருகனுக்கு விழாக்கள் பொலிவுடன் நடைபெறும். தைப்பூசம் பத்து நாட்கள் விழாவின் போது, பாதயாத்திரையாக வரும் செட்டிநாட்டு மக்கள் பயணக்களைப்பு தெரியாமல் இருக்க, பழநி முருகனின் வழிநடை சிந்துப் பாடல்களைப் பாடிக் கொண்டு வருவார்கள்.

பங்குனி பெருவிழாவின் போது கொங்கு நாட்டு மக்கள் ஏராளமான பக்தர்கள் ''கொடுமுடி'' சென்று தீர்த்தம் கொணர்ந்து பழநி முருகனுக்கு தீர்த்த அபிஷேகம் செய்வர்.

இதில் பங்கு கொள்வோர் பெரும்பாலும் நாட்டுப்புற மக்களே! எனவே பங்குனி பெருவிழாவை 'நாட்டுப்புற திருவிழா' என அழைப்பர்.

பால் காவடி, பன்னீர் காவடி, இளநீர் காவடி, சந்தனக் காவடி என எடுத்து வருவது சிறப்பு. பழநி முருகன் தேர்த்திருவிழாவில் வெள்ளி, தங்கத்தேரிலும் பவனி வருவார். சேலத்தை அடுத்த இடைப்பாடியில் வாழும் பருவத ராஜகுல பெருமக்கள் பத்தாயிரம் பேருக்கு குறையாமல், ஆண், பெண், குழந்தைகள் என அத்தனை பேரும் காவடியுடன் கால்நடையாக ஆண்டு தோறும் பழநி முருகனை வழிபட வருகிறார்கள். அக்குல மக்கள் ஒரு இரவு மலையில் தங்கி, பழநி முருகனுக்கு அபிஷேகம் செய்ய லாரி லாரியாகக் கொண்டு வரும் அபிஷேக சாமான்கள், மலை போல் குவித்து வைத்திருக்கும் மலை வாழைப் பழங்களும், குன்று போல் குவித்து வைத்திருக்கும் சர்க்கரையும் கண்டு வியந்து மகிழத்தக்கன.

திருத்தணி

மலைத்தலங்களின் மணிமகுடமாக விளங்குவது திருத்தணி. இது ஊரின் நடுவே 400 அடி உயரத்தில் உள்ளது. 365 படிகளைக் கொண்டது தணிகை மலை. 4 பிரகாரங்கள் கொண்டது. உள்ளே கருவறையில் தணிகேசன் சுந்தர வடிவுடன் இடக்கரத்தை தொடையில் வைத்து, வலக்கரத்தின் மேல் வேல் தாங்கி, தனித்து நின்று காட்சி தருகிறார். இங்கே முருகன் ஞான சக்திதாரராகத் திகழ்கிறார்.

உற்சவமூர்த்தி உருத்திராட்ச மண்டபத்தில் ஒரு முகம், நான்கு கரங்களுடன் வள்ளி, தெய்வானையுடன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
விளங்குகிறார். முன்னே நவவீரர்கள் உள்ளனர். மற்றொரு உற்சவர் ஆறுமுகம், பன்னிருகைகளுடன் இரு தேவிமார்களுடன் மயில் மீது அமர்ந்து காட்சி தருகிறார். அருணகிரி நாதர் இங்கு பல நாட்கள் தங்கி தணிகேசனை புகழ்ந்து, அற்புதமான சந்தப்பாக்கள் 66 பாடி உள்ளார். சித்திரை, மாசி பிரம்மோற்சவம், மாசி மகம், தீர்த்தவாரி, வள்ளி கல்யாணம், தெய்வானை கல்யாணம் நடைபெறும். ஆடிக்கிருத்திகை, தெப்பத் திருவிழா, படித்திருவிழா கோயிலில் சிறப்பு மிக்க திருவிழாக்கள், பூக்காவடிகள் ஆடி உற்சவத்தில் இரண்டு லட்சத்துக்கு மேல் இருக்கும். தமிழ்நாடு, ஆந்திரம், கர்நாடக பக்தர்கள் என ஏராளமானவர்கள் வந்து கூடுவார்கள். கந்தர் சஷ்டியின் போது சூரசம்ஹாரம் கிடையாது. தணிகைநாதன் முன் மயிலுக்கு பதிலாக யானை உள்ளது. ஆங்கில புத்தாண்டு தொடக்க நாளில் திருப்படி திருவிழா சிறப்பான விழா.

பழமுதிர்ச்சோலை

''காடும் காவும் கவின் பெறு துருத்தியும்
ஆறும் குளனும் வேறு பல் வைப்பும்''

துருத்தி என்றால் அரங்கம் முதலில் பொது இடங்களில் முருகன் எழுந்தருளுகின்றான் என்று நக்கீரர் திருமுருகாற்றுப் படையில் குறிப்பிடுகிறார். காடு - முல்லை நிலம், கா-சோலை-பழமுதிர்ச்சோலை. பொதுவாக முருகன் வளமான செழித்த செறிந்த சோலைகளில் விரும்பி வீற்றிருக்கின்ற இடங்களாகும். சோலை மலையின் அடிவாரத்தில் இருப்பது அழகர் கோயில். மலைச்சரிவில் வேல் பொறித்த சிலை ஒன்றை மக்கள் வழிபட்டு வந்தனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இது வேல் கோட்டம். இது மிகப்பழையது. இதுவே ஆளும் திருப்பதி. மூலவர் வேல் காலப்போக்கில் முருகன் முதலானோர் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்ட பிறகு வேல் கோட்டம் முருகன் கோவிலாக விரிந்தது.

எனவே குறிஞ்சி நிலப்பகுதிகளில் அமைந்த முருகன் குன்று தோறாடல் என்னும் ஐந்தாம் திருப்பதியாம். குறிஞ்சி, முல்லை நிலப்பகுதிகளில் மரம், செடி, கொடிகள் செறிந்த சோலைகளில் அமைந்த முருகன் கோயில்கள் ''பழமுதிர்ச்சோலை'' என்ற ஆளும் திருப்பதியாகும். மதுரை நகருக்கு 20 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது 'அழகர் கோவில்' திருமாலிருஞ்சோலை என இது அழைக்கப்படும். அங்கிருந்து 2 கிலோ மீட்டரில் அமைந்துள்ள பழமுதிர்ச் சோலையில் முருகன் ''மலைக்கிழவனாக'' அமர்ந்துள்ளார். செந்தூரில் மருகர் முருகன் தயவில் மாமனாகிய திருமால் திருக்கோயில் கொண்டுள்ளார். அழகர் கோயிலோ.... மாமன் தயவில் மருகன் முருகன் கோயில் கொண்டுள்ளார்.

பழமுதிர்சோலை பழமையான தலம். இளங்கோவடிகள் இங்கேயுள்ள நூபுர கங்கைச் சுனையின் மாதவி மண்டபத்தில் அமர்ந்துதான் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்ற காப்பியத்தை எழுதியதாக வரலாறு கூறுகிறது. சங்க காலத்திலும், அருணகிரிநாதர் காலத்திலும் விளங்கிய கோவில் இப்போது இங்கு இல்லை. இப்போதுள்ள கோவில் மிகவும் அண்மை காலத்தது.

இங்கு வேல்தான், மூலவர். முருகப்பெருமான் ஒரு முகத்துடன் 4 ஃக்கைகளுடன் வள்ளி தெய்வானையுடன் நின்ற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருக்கோலத்தில் காட்சி தருகிறார். நூபுர கங்கை இத்தல தீர்த்தம். தல விருட்சம் நாவல் மரம். மற்ற நாவல் மரங்கள் விநாயக சதுர்த்தியின் போது பழம் கொடுக்கும். ஆனால் இந்த நாவல் மரங்கள் கந்தர் சஷ்டியின் போதுதான் பழம் கொடுக்கும். கந்தர் சஷ்டி, இலட்சார்ச்சனை நடைபெறும். அருணகிரிநாதர் இத்தலத்தில் பாடிய அருந்தமிழ் பாக்கள் பதினாறு. பைந்தமிழ் முருகன் கோவில் கொண்டுள்ள பழமுதிர்ச்சோலையையே நக்கீரர் ஆறாவது படைவீடாகக் காட்டி, தமது முருகாற்றுப் படையை முடிக்கிறார்.

"அகரமுமாகி, அதிபனுமாகி அதிகமுமாகி அகமாகி

– திருப்புகழ்

ஆறுமுகன் அமைத்த அளவற்ற சக்தி வாய்ந்த திருத்தலங்களாக விளங்கும் அறுபடை வீடுகள் முன்வினை பயன்களால், இப்பிறவியில் துன்பப்படும் மக்களுக்கு, பாவங்களைப் போக்கி நல்வாழ்வு அளிக்கும் சக்தி வாய்ந்த திருத்தலங்களாகும். இப்புனிதத் தலங்களை தரிசித்து நற்பயன்களை அடைவோமாக!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ சித்திரகுப்த ஸ்வாமி ஆலயம்...

தமிழகத்தில் காஞ்சி மாநகரில் பழமையும் பெருமையும் வரலாற்றுச் சிறப்பும் வாய்ந்த புகழ்மிக்க ஸ்ரீ சித்திரகுப்த ஸ்வாமி கோயில் அமைந்துள்ளது. யமனது திக்காகிய தெற்கு நோக்கி அமர்ந்துள்ள மூர்த்தியாக இது எழுந்தருளியுள்ளது.

ஸ்ரீ சித்திரகுப்த ஸ்வாமி ஒவ்வொருவரின் பாவச் செயல்களையும், புண்ணியச் செயல்களையும் ஒன்று விடாமல் தனித்தனியாக கணக்கு எழுதி வருகிறார்.

இக்கணக்கின்படி தான் ஒவ்வொருவரின் மறுபிறவியும் அதன் வாழ்க்கையும் முடிவும் அமையும் அல்லது மோட்சம் என்ற நிலையும் கிடைக்கும்.

இதனாலேதான் மோக்ஷ பலன் அளிக்கும் கேது பகவான் ஸ்ரீ சித்திர குப்த சுவாமியை அதிதெய்வமாகக் கொண்டு இருக்கிறார்.

கேது பகவான் சாந்தி ஸ்தலம்

நவக்கிரகங்களில் ஒன்பதாவதாகத் திகழ்வனவும், சித்திரலேகா சமேத கேது பகவான் என்று விளங்குபவனுமான. நிழற்கோளின் அதிர்ஷ்டான தேவதை சித்திரகுப்தரேயாவார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எனவே அசுபகிரகம் என்றே பெயர் பெற்றது. இக்கேது பகவானால் விளையத்தக்க தீங்குகள் யாவும் நீங்கி நன்மை எய்த விரும்புவோர் சித்திரகுப்தரைச் சிறப்பாக வழிபடுவது சாத்திரப்படி வழக்கில் உள்ளது. அதிகாலை சித்திரகுப்தரை வழிபடுவதோடு கேது பகவானுக்கு உகந்த கொள்தானியம் வடையாகவோ, சுண்டலாகவோ புளியோதனத்துடன் நைவேத்தியமாகப் படைத்துக் கேது பகவானைப் பிரீதி செய்யும் தோத்திரங்களைப் பாடி, கேது பகவானுக்குரிய செங்கருப்பு நிற மலர்களைக் கொண்டு அர்ச்சனை புரிந்து வணங்குவது முறையாகும்.

கேது பகவான் தரும் அசுப பலன்கள்

தாய்க்கு உடல் நலம் கெடலாம், திருமணம் தடைபடலாம். பிள்ளைப்பேறு காலதாமதமாகலாம், அம்மை வார்க்கலாம். விஷம் சம்பவிக்கலாம், லாகிரி, மது வஸ்துக்கு அடிமையாகலாம். ஒழுக்கம் கெடலாம், சிறைப்படலாம்.

ஒருவரின் ஜெனன ஜாதகத்தில் லக்கினத்திற்கு இரண்டில், நான்கில், ஐந்தில், ஏழில், கேதுபகவான் இருக்கப் பிறந்தவர்களும், பொதுவாக ஒருவருக்கு கேது மகாதிசை ஆரம்பமாகும் காலத்திலும், அசுவனி, மகம், மூலம் ஆகிய நட்சத்திரத்தில் பிறந்தவர்களும் கேது பகவானுக்கும் இவர் அதி தெய்வமான ஸ்ரீ சித்திர குப்த ஸ்வாமிக்கும் அபிஷேகம், அர்ச்சனை செய்து கொள்வது அவசியமாகும்.

இப்படி தன் கொடிய அசுப பலன்களைக் கொடுக்க வல்ல கேது பகவானுக்கும் அவர் அதி தெய்வமான ஸ்ரீ சித்திர குப்த ஸ்வாமிக்கும் நாம் சாந்தி செய்து அசுப பலன்களை நீக்கி சுப பலன்களைப் பெறுவோமாக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அண்டியவர்க்கு அபயம் அளித்திடும் அன்னை...!

ஈரேழு பதினான்கு அகிலங்களையும் காத்தருளும் அன்னை பராசக்தி மூன்று அம்சங்களாக உலகம் அனைத்தையும் காத்து, அருள்புரிந்து வருகிறாள். இமவானின் புதல்வியாக அவதரித்து, அம்மையப்பனின் இடப்பாகத்தில் அமர்ந்து, அர்த்தநாரீஸ்வரியாக தரிசனம் அளிக்கிறாள்.

அமுதம் வேண்டி, தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடைந்த போது, மகாலட்சுமியாகத் தோன்றி, திருமாலின் திருமார்பினை அலங்கரித்தாள்.

படைப்புக் கடவுளான சதுர்முகப் பிரம்மனின் திருவுள்ளப்படி, சகல கலைவாணியாக சரஸ்வதி என்ற திருநாமத்துடன், பிரம்மதேவனின் நாவில் இடம் பெற்றாள்-கல்விக்கு அரசியாக!

அன்னையின் மூன்று சக்திகளான அம்பிகை, மகாலட்சுமி, சரஸ்வதி ஆகியோர், ஒவ்வொரு வினாடியும் நமக்குத் துணையாக இருந்து, நம்மைக் காத்தருள் புரிந்து வருகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொதுவாக, எல்லா திருக்கோவில்களுமே புனித சக்தி வாய்ந்தவைதான். ஆனால், அவற்றிலும், சில தனிச்சிறப்புப் பெற்ற, விசேஷ சக்திகள் சிலவற்றிற்கு உள்ளன. இதற்குக் காரணம், கருவறையில் பிரதிஷ்டை (மந்திரசக்தி ஊட்டப் பெற்ற) செய்யப்பட்டுள்ள சிலைகளின் பீடத்தின் அடியில் வைக்கப்பட்டுள்ள அபார சக்தி வாய்ந்த யந்திரங்களே ஆகும். இந்த யந்திரங்களை வீடுகளில் வைத்து பூஜிக்க இயலாது. அந்த அளவிற்கு அவை மந்திரசக்தி பெற்றவை ஆகும். சில நியமங்கள் (தூய்மையும், சூழ்நிலையும்) அவற்றிற்கு அவசியம் ஆகும். அத்தகைய நியமங்கள் வீடுகளில் கிடையாது. ஆதலால், யந்திர பிரதிஷ்டைகளை, திருக்கோயில்களில் செய்திருக் கின்றனர் நமது முன்னோர்கள்.

நம் பாரத நாட்டின் மகா புருஷர்கள், ஒன்றை மிகத் தெளிவாகப் புரிந்து கொண்டிருந்தார்கள். அதாவது, பெண்களின் துன்பங்களே ஆகும். இயற்கையிலேயே பெண்களுக்கு என்று சில பிரத்தியேக சோதனைகள் வாழ்க்கையில் ஏற்படுவதை அவர்கள் உணர்ந்திருந்தனர். ஆதலால், பெண்களின் துயர் துடைப்பதற்கென்றே, பிரத்தியேகமாக, சில அபூர்வ சக்தி வாய்ந்த யந்திரங்களை, அம்பிகை மற்றும் தாயார் சன்னிதிகளின் கருவறைகளில் பிரதிஷ்டை செய்து வைத்தனர். ஏனெனில், நம் நாட்டில் பெண்கள் அம்பிகை, தாயார் சன்னிதிகளுக்கு, முக்கியமாக செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் தரிசனம் செய்யத் தவறுவதில்லை.

அத்தகைய விசேஷ சக்தி பெற்ற அம்பிகை, அம்மன், தாயார் திருக்கோயில்களைப் பற்றிய சிறப்புகளை (கோகுலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கதிர் வாசக சகோதரிகளின் நன்மையைக் கருதி) இக்கட்டுரையில் விவரித்திருக்கிறேன். இத் திருக்கோவில் களை தரிசித்து, நல்வாழ்வு பெற வேண்டுகிறேன்.

ஸ்ரீரங்க நாயகி தாயார், அரங்கன் திருக்கோவில், ஸ்ரீரங்கம்.

சுக்கிர தோஷ நிவர்த்தி திருத்தலம்.

கணவன் - மனைவி ஒற்றுமை இன்மை. தாம்பத்திய சுகக் குறைவு. தினமும் குடும்பத்தில் கருத்து வேற்றுமை ஆகியவற்றை உடனடியாக நிவர்த்தி அளிக்கும்.

ஸ்ரீபெருந்தேவி தாயார் பெருமாள் கோவில், சின்ன காஞ்சிபுரம்.

விவாகத்தடை நீங்குதல், வறுமை நீங்கும். கடன் தொல்லை விலகும்.

ஸ்ரீ கர்ப்பரட்சாம்பிகை, திருக்கருகாவூர் (முல்லை வனநாத ஸ்வாமி திருக்கோவில்)

கருச்சிதைவு, ஆரோக்கியமான குழந்தை, சுகப்பிரசவம்.

ஸ்ரீகாமாட்சி அம்மன், காஞ்சிபுரம்.

வறுமை நீங்கும். ஐஸ்வர்ய கடாட்சம்,.கடன் தொல்லை நீங்குதல், வித்யாப்ராப்தி (கல்விச் செல்வம்)

ஸ்ரீசுந்தரகுஜாம்பிகை திருவீழிமழலை

முன்வினை தீரல், திருமணத்தடை நீங்குதல், பெண்களுக்கு சர்மநோய் நீங்குதல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீதுர்க்கை, பட்டீஸ்வரம்

செய்வினை நிவர்த்தி, மனோவியாதி, காரணமற்ற பயம், துர்ஸ்வப்னம் (தீய கனவுகள்)

ஸ்ரீகுகாம்பிகை, திருப்புறம்பியம்

மலட்டுத் தன்மை நீங்குதல், புத்திர பாக்கியம், குழந்தைகள் பாசம் இல்லாமல் இருத்தல்.

ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி, திருவானைக்கோவில் (ஸ்ரீஜம்புகேஸ்வரர் திருக்கோவில், திருச்சி)

பில்லி, சூன்யம், செய்வினை நீக்கம், தொழில் பகை, பொறாமையினால் தீங்கு விளைவித்தல் ஆகியவற்றிற்கு பரிகாரத் தலம்.

அலர்மேல் மங்கை தாயார், திருப்பதி - திருச்சானூர், திருப்பதி.

தரித்திரம் நீங்க, கைவிட்டுப்போன சொத்துக்களை திரும்பிப் பெற.

ஸ்ரீ ஆண்டாள், ஸ்ரீவில்லிபுத்தூர்.

விவாகத் தடைகள், மாங்கல்ய தோஷம், பக்தி, ஞானம் பெற, திருமணம் நிச்சயமாகி நின்று போவது, விவாக சம்பந்தமான குழப்பங்கள் நீங்க.

ஸ்ரீ சரஸ்வதி, கூத்தனூர்

கல்வி முன்னேற்றம் தடைபடுதல், விசேஷ படிப்பு, பயிற்சி பெற வெளிநாடு செல்ல முயற்சித்தல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீதேவி, பூதேவி (வைகுண்டநாயகி), திருப்பெருவேளூர், மணக்கால் அய்யம்பேட்டை (ஸ்ரீவைகுண்ட நாராயணப் பெருமான் திருக்கோவில்)

தாம்பத்திய சுகக் குறைவு, மாதவிடாய்க் கோளாறுகள், தீராத வயிற்றுவலி, கணவரால் புறக்கணிக்கப்படுவது, கணவரின் பிற ஸ்திரிகள் தொடர்பு விலகல்.

ஸ்ரீசெண்பகவல்லித் தாயார், மன்னார்குடி (ஸ்ரீராஜகோபாலன் திருக்கோவில்)

1. குழந்தை பாக்கியம் 2. பெண்கள் உடம்பில் துர்நாற்றம் நீங்குதல் 3. மறைவிடங்களில் சர்ம நோய்.

மேலே விளக்கப்பட்டுள்ள பிரத்தியேக சக்திகள் அனைத்தும் உடனடியாகப் பலன் அளிக்கக் கூடியவை ஆகும். இவ்விதம் விசேஷ மந்திர சக்திகள் பெற்ற மேலும் பல திருக்கோவில்கள் நமது தெய்வத்திரு தமிழகத்தில் உள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ்வளவு எளிதில் என்னை தூக்கி எறிந்து விட்டாயே!

தாம்பரம் ரெயில் நிலையத்தில் ஒரு மீட்டர் கேஜ் ரயில் விட்ட கண்ணீர்! இன்னைறய மனிதா! இன்று நீ இப்படி நன்றி மறந்து நடந்து கொள்வாய் என்று தானோ என்னவோ, உனக்காகவேதான் குறளை எழுதிவிட்டார் போலும் வள்ளுவர்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு."

உனக்காக நான் எத்தனை வருடங்கள் ஓடி ஓடி உழைத் தேன். இரவில் உனக்கு பின் தூங்கி, விடியலில் எழுந்து, ஓய்வு என்பதே இல்லாமல் ஓடினேன். பின் துங்கி முன் எழும் பேதையாக நீ கைப்பிடித்த உன் மனைவி கூட இப்படி நடந்து கொண்டிருக்க மாட்டாள்.

உனக்காக காலம் எல்லாம் ஓடி ஓடி உழைத்த எனக்கு இன்னும் ஏழே ஆண்டுகளில் சதாபிஷேகம் கொண்டாடு வாய் என்று ஆசையுடன் எதிர்பார்த்தேன். நீ பெண் பார்க்கும் போதும், உன் கல்யாணம் முடிந்து உன் மனைவியுடன் தேனி லவு, என்று உனக்காக என் வண்டியில் இடம் கொடுத்து சக்கரமாக உழைத்துள்ளேன். எத்தனை, எத்தனை விதமான மனிதர்கள்! பெரும் பணக்காரர், நடுத்தரவர்க்கத்தினர், ஏழை, எளியோன் மற்றும் படிக்கும் மாணவ, மாணவியர் என்னிடம் வண்டியில் வந்து படித்து சகல துறைகளிலும் வெற்றியடைந்து நல்ல உயர் பதவி வகிப்பவர்கள், வாழ்க் கையில் கஷ்டப்பட்டு முன்னேறியது எனக்கு மிக மிக பெருமையாக உள்ளது. நான் எல்லோரையும் போல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உன்னிடம் ஏதாவது எதிர் பார்த்தேனா! பிச்சைக்காரர்களும் என்னிடம் அடைக்கலமாக சினிமாட பாடல்கள் பாடி என்னை தாலாட்டி இருக்கிறார்கள். டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்தும், பழைய பொருட்கள், அழுகிய பழங்கள், குப்பைகள் யாவற்றையும் என்னிடம் போட்டு என்னை அசிங்கப்படுத்தியதையும் நான் பொருட்படுத்தாமல் என் கடமையை சக்கரங்களால் ஓடி, ஓடி உழைத்தேன்.

இன்னொன்று தெரியுமா உனக்கு? தேசபிதா மகாத்மா காந்திஜி அவர்களை சுமந்த பெருமை எனக்கு உண்டு.

மார்கழி மாதங்களில் ஐயப்ப பக்தர்கள் பாடி மகிழ்விக்கும் பஜனை பாடல்களை நான் இன்னும் மறக்கவில்லை. எத்தனை பெண்களுக்கு பிரசவம் என் வண்டியில் நடந்திருக்கு தெரியுமா? அந்த இளஞ்சிருர்களின் முதல் அழுகைக் குரல் கேட்டு மனம் சிலிர்த்துள்ளேன். எத்தனை விதமான இன்ப அனுபவங்கள்! அடேயப்பா! எல்லாவற்றையும் இழந்து தனிமையில் வெயியில் தகிக்க, மழையில் நனைந்து அநாதையாக நின்று கொண்டிருக்கும் என்னைப் பார்த்து பிராட் கேஜில் செல்லும் புது வண்டிகள் ஏளனமாக சிரித்துவிட்டு ஓடிக் கொண்டிருப்பது மனசை ரொம்ப வருத்தமடைய செய்கிறது.

ஆனால் ரயில்வே இலாகா! எனக்காக ஒரு மலர் மாலை நீ போட வேண்டும்! என்ற சினிமா பாடலில் வரும், அது எதற்கோ? ஒரு மலர் மாலையுடன் என்னை வழி அனுப்பியதை, பிராட் கேஜில் ஓடும் புது வண்டி என்னை பார்த்து 'போனால் போகட்டும் போடா' என்று சொல்வது போல் உள்ளது. நீங்களும் அப்படித்தானே? நான் சற்று அகல குறைவாக ஒல்லியாக இருப்பதால் தானே! ''ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள்''.

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிராட்கேஜ் எத்தனை நாளைக்கு? போகட்டும் நானும் பார்க்கத்தானே போகிறேன். ஆனால் கடைசியாக எனக்கு வர்ணபூச்சுக்கள் பூசி, வாழை மர தோரணங்கள் கட்டி அலங்கரித்து ஒரு சிறிய தூரம் வெள்ளோட்டம் செய்து அதில் என் மீது அபரிமிதமான அதிக வருஷங்கள் சவாரி செய்த அன்பர்கள் ஆரவாரித்து பூமழை சொரிந்து எனக்கு மரியாதை செய்தது என்னை ஆனந்தமடைய செய்தது. ''பை'' சொல்லி என்னை பைய்ய ஓரம் கட்டிவிட்டனர். வணக்கம்! மீண்டும் என்னை என் ஓய்விலிருந்து என்னை ஓட்ட வேண்டும்.

நன்றி! நன்றி! மிக்க நன்றி!!!

கலர் கலராக மரங்கள்!

அந்த குறிப்பிட்ட ஏரியாவின் மரம் செடி, கொடிகளைப் பார்ப்பதற்கென்றே உலகம் முழுக்கவும் இருந்து ஆயிரம் ஆயிரம் மக்கள் தினந்தோறும் வருகின்றனர்!

பச்சைப் பசேலென்று சிலிர்த்து தலையாட்டும் செடிகளும், மரங்களும் ஏதோ ஒரு மேஜிக் நிகழ்ந்தது போல் சில தினங்களிலேயேஇளம் பச்சையாக நிறம் மாறி, பிறகு ஊதா, மஞ்சள், வயலட், தங்க நிறம் என்று உற்சாகமான இளம் பெண்போல நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக மாறுகிறது. இந்த அழகைக் கண் கொட்டாமல் பார்த்து ரசிக்கவென்றே உலகம் முழுக்க இருந்து வருகிறார் கள் மக்கள்.

என்ன டிசைன்! என்ன வண்ணச் சேர்க்கை! கை தேர்ந்த ஓவியன் கூட இவ்வளவு வண்ணச் சேர்க்கையை அமைக்க முடியாது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்த வண்ணக் கலவையின் அமர்க்களம் ஒரு மாதம் நீடிக்கிறது. அப்புறம் பிளாக் அண்ட ஒயிட் ஓவியம் போல இந்தக் காட்சி திடீரென மாறும் எல்லா மரம் கொடிகளும், இலைகள் உதிர்ந்து போய், கோடுகளால் ஆன ஓவியமாக காட்சியளிக்கும் பின் அதன் மேல் பனித்துளிகள் படர்ந்து பஞ்சு ஓவியங்களாக சூழல் மாறும்.

இத்தனை அழகும் அற்புதமும் எங்கே நிகழ்கிறது என்கிறீர்களா?..: அமெரிக்காவின் வடகோடியில் உள்ள சிராக்யூஸ் நகரில் தான் இந்த மேஜிக் எல்லாம். (இந்த நகரம் அதன் மல்ட்டி மீடியா பல்கலைக்கழகத்துக்குப் பெயர் பெற்றது) அருகிலுள்ள நியூஜெர்ஸி, பொமானா நகரங்களிலும் இப்படிதான்!

சிராக்யூஸ்-ல் குடியிருக்கும் என் மகன் கண்ணனையும் மருமகள் சௌபாவையும் பார்க்க, நானும் என் கணவர் ஏ.எம்.ராஜகோபாலுனும் போயிருந்த போதுதான் இயற்கையின் இப்படியொரு மேஜிக்கை நேரில் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது.

அங்கே இலையுதிர் காலத்தில் ஏற்படும் அழகான மாறுதல்களே இவை 'ஃபால்ஸ் சீசன்' என்று இந்த ஏரியாவில் இது மிகப் பிரபலம். இத்தாலி, ஜெர்மனி, ஸ்பெயின், பிரான்ஸ் போன்ற நாடுகளிலிருந்து இந்த வண்ண அட்டகாசத்தைப் பார்ப்பதற்கென்றே வந்திறங்கியிருந்த சுற்றுலா பயணிகளின் கூட்டத்தைப் பார்த்தபோது பிரமிப்பாக இருந்தது.

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இயற்கை அன்னையின் அழகை நினைத்து மட்டுமல்ல. புத்திசாலித்தனத்தையும் நினைத்து புல்லரித்துப் போய்விட்டேன். பின்னே! அந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செடிகளின்...மரங்களின் இலைகள் மட்டும் உதிராமல் இருந்திருந்தால் மழையாக விழும் பனியைத் தாக்குப் பிடிக்க முடியாமல் அந்த இலைகளின் உடம்பு எத்தனை வலித்து இருக்கும்!

இந்த இலையுதிர் காலத்திலும் பனிவிழும் நேரத்திலும் பட்டுப் போன மரங்களினூடே 'கிறிஸ்துமஸ் மரம்' மட்டும் எதற்கும் அஞ்சாமல், பளீரென்ற பச்சை நிறத்தில் அங்கொன் றும் இங்கொன்றுமாக காட்சி அளித்து ஆறுதல் அளித்தது. ஆனால் ஆப்பிள் மரத்தில் மட்டும் சிறு சிறு கனிகள் உதிராமல் காய்த்து இருக்கிறது. பனி மழையை லட்சியம் செய்யாமல் கரிய நிறப் பறவை இனம் வந்து அந்த ஆப்பிள் பழங்களை சாப்பிட்டு இளைப்பாறுகிறது. என்னே! இந்த இயற்கையின் ஈகை குணம்!

இத்துடன் இந்த விளையாட்டு முடிந்துவிடாது. அடுத்த ஆண்டும் இது தொடரும். இங்குள்ள மரங்கள் வருடா வருடம் பூமித்தாயிக்கு மலர் தூவி அர்ச்சனை செய்கின்றன போலும். எவ்வளவுதான் உதிர்ந்து போனாலும் குழந்தை களாக பூமித் தாயின் மடியில் தூங்கி மீண்டும் துளிர்க்கும். வண்ண மலர் தூவி மீண்டும் ஜாலம் காட்டும். இது இயற்கை அன்னை அளித்த வரம்!

சூடிக் கொடுத்த சுடர்கொடி ஆண்டாள் இதனை பார்த்தி ருந்தால், இந்த வண்ண இலைகள் மற்றும் மலர்களையும் மாலவனுக்கு மாலையாக சூட்டி மகிழ்ந்திருப்பாள்! வண்ண மரங்களை இறைஞ்சி கேட்கிறேன்...எங்களிடமிருந்து எதை யும் எதிர்பாரத உங்கள் வள்ளல் தன்மையை எங்களுக்கும் சிறிது கொடுங்களேன் என்று!

-திருமதி பத்மா ராஜகோபாலன்,

சென்னை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்றும் கைவிடேன் எனது பக்தர்களை!

அக்கிரமங்கள் செய்வது, அதர்மத்தை வளர்ப்பது, சாதுக்களைத் துன்புறுத்துவது, தானும் தன்னைச் சேர்ந்த மற்ற அசுரர்களும் மட்டும் உலகின் அனைத்து சுகங்களையும் அனுபவிப்பது, அதற்காக, கடும் தவம் இயற்றி, நியாயமற்ற வரங்களையும், அளவற்ற பலத்தையும், பிரும்ம தேவனிடமிருந்து பெறுவது. அந்தப் பலத்தைக் கொண்டே, தேவர்களையும், மகரிஷிகளையும், சாதுக்களையும் கொடுமைப்படுத்துவது என்று, இவற்றையே தொழிலாகக் கொண்டிருந்தார்கள் இரு அரக்க சகோதரர்கள்!

அவர்கள் யார்?

அவர்கள் தான் இரண்யாட்சனும், இரண்ய கசிபுவும். இருவரும் சகோதரர்களே - அதர்மமும், அநியாயமும் போல!!

தவத்தினால் பெற்ற பலத்தைக் கொண்டு, ஈரேழு, பதினான்கு உலகங்களையும் வென்றனர் இருவரும். வெற்றி, அவர்கள் மனதில் ஆணவம் என்ற வெறியை உண்டாக்கியது.

தன் பலத்தினால் பூமிதேவியை அபகரித்துக் கடலினுள் ஒளிந்தான் இரண்யாட்சன். பகவான் ஸ்ரீமந் நாராயணன் வராக

அவதாரம் எடுத்து, பாதாளம் வரை சென்று, இரண்யாட்சனை யுத்தத்தில் வதம் செய்து, பூமாதேவியைக் காப்பாற்றி அருளினார்.

தன் சகோதரன், இரண்யாட்சன் ஸ்ரீமந் நாராயணனால் வதம் செய்யப்பட்டதைக் கண்டு வெகுண்டான். தம்பி இரண்ய கசிபு, பகவானே தன் முதல் எதிரி எனக் கருதினான். ''நான் தான் இனி தெய்வம். நாராயணனுக்கு இனி இடமில்லை இங்கு'' என்று கொக்கரித்தான். இனி என் நாமத்தை மட்டுமே அனைவரும் உச்சரிக்க வேண்டும். என்னை மட்டுமே பூஜிக்க வேண்டும். என்று ஆணையிட்டான். சாதுக்களைக் கொன்று குவித்தான். அக்கிரமம் அளவு கடந்தது. தேவர்களின் உலகைப் படையெடுத்துக் கைப்பற்றினான் இரண்ய கசிபு. தேவேந்திரன் ஓடி ஒளிந்தான், தன் ராணி இந்திராணியுடன்.

இருப்பினும், எமபயம் இரண்ய கசிபுவின் மனதை உறுத்திக் கொண்டே இருந்தது. என்றாவது ஒரு நாள், தனக்கு மரணம் ஏற்படும் என்ற நினைவில் அஞ்சினான். தவம் செய்து, சாகா வரம் பெற்றால் என்ன? என்று சிந்தித்தான். ஒரு நாள் முடிவும் எடுத்து விட்டான். தன் மனைவி கயாதுவிடம் கூறிவிட்டு, இமயமலைக்குச் சென்று கடும் தவத்தை மேற்கொண்டான்.

அவன் மனைவி கயாது அப்போது கருவுற்றிருந்தாள். மகா உத்தமி அவள். அசுரனுக்கு அப்படி ஒரு உத்தம மனைவியா? அதுதான் இறைவனின் திருவிளையாடல் ஆகும். அந்தப் பரமனின் சித்தம் யாருக்குத்தான் புரியும்..?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கணவன் இரண்யகசிபு தவம் செய்ய இமயத்திற்குச் சென்றிருந்த போது, பாதுகாப்பு கருதி கயாது, நாரத மகரிஷியின் ஆசிரமத்தில் தங்கியிருந்தாள். அப்போது, அவளது கருவில் வளர்ந்து கொண்டிருந்த குழந்தைக்கு, வெளியிலிருந்தே 'ஓம் நமோ நாராயணாய'' என்ற அஷ்டாட்சர மந்திரத்தை உபதேசித்து அருளினார் நாரத மகரிஷி.

ஓர் நன்நாளில், கயாதுவும், ஒளி பொருந்திய அழகுடன் ஆண் குழந்தையைப் பெற்றாள். குழந்தைக்கு பிரகலாதன் என்று பெயரிட்டு, ஆசி கூறினார் நாரத மகரிஷிரி.

தாயின் வயிற்றிலேயே நாரத மகரிஷியினால் நாராயண மந்திர உபதேசம் பெற்றதால், குழந்தை பிரகலாதன் அனைத்து நற்குணங்களுடன், பகவான் ஸ்ரீமந் நாராயணன் மீது அளவற்ற பக்தி பூண்டவனாக வளர்ந்து வந்தான்.

இதற்கிடையில் இமயத்தில் பிரும்மதேவனைக் குறித்து தவம் இருந்த இரண்ய கசிபுவின் வைராக்கியத்தைக் கண்டு, பிரும்மா அவனுக்குத் தரிசனம் அளித்து, வேண்டும் வரத்தைக் கேள் என்று கேட்டார். ''சாகா வரம் வேண்டும் எனக்கு'' என்று விடை கூறினான் இரண்ய கசிபு.

''அது சாத்தியம் அல்ல. வேறு ஏதாகிலும் கேள்!'' என்றார் பிரும்ம தேவனும்.

''அப்படியானால், எனக்கு ஆயுதங்களினாலோ, இரவிலோ அல்லது பகலிலோ, வீட்டிற்கு உள்ளேயோ அல்லது வெளியேயோ, மனிதனாலோ அல்லது மிருகத்தினாலோ, பூமியிலோ அல்லது ஆகாயத்தினாலோ

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மரணம் ஏற்படக் கூடாது என்ற வரத்தைத் தாருங்கள்'' என்றான் இரண்ய கசிபு.

எதனால் எல்லாம் ஒரு மனிதனுக்கு மரணம் ஏற்படக் கூடுமோ, அவற்றையெல்லாம் சிந்தித்தே, இரண்யகசிபு, சாதுர்யத்துடன் இத்தகைய வரத்தைக் கேட்டான்.

''அவ்விதமே ஆகட்டும்'' என்று வரம் அளித்து மறைந்தார் நான்முகனும். அதன் பிறகு தான் ஆரம்பித்தது, மேலும் மேலும் அவனது அட்டகாசச் செயல்கள். தேவர்கள் நடுங்கினர். மானிடர் கலங்கினர். பூமாதேவி கண்ணீர் வடித்தாள் செய்வது அறியாது.

இமயத்தில் தன் தவத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பினான் இரண்ய கசிபு. கயாது தன் கணவனை மகிழ்ச்சியுடன் வரவேற்றாள்.

தன் பிள்ளை பிரகலாதனைக் கண்டு ஆனந்தமடைந்தான். உச்சி முகர்ந்து, முத்தமிட்டு, பரவசப்பட்டான். தன் கொடுஞ்செயல்களைத் தொடர்ந்து செய்து வந்தான் இரண்யன். செய்வதறியாது, சாதுக்கள் காடுகளில் ஒளிந்தனர்.

ஆனால், இறைவனோ தன் கணக்கில் தவறியதில்லை! காலம் மௌனமாக ஓடிக் கொண்டிருந்தது. தவழ்ந்து விளையாடிய குழந்தை பிரகலாதன் பாலகனாக வளர்ந்து விட்டான். நாரத மகரிஷியினால், தாயின் கர்ப்பத்தில் இருக்கும் போதே நாராயண உபதேசம் பெற்றதால், சதா சர்வமும், சர்வலோக சரண்யனான ஸ்ரீமந் நாராயணனையே பூஜித்து வந்தான். வாயில் எப்பொழுதும் ''ஓம் நமோ நாராயணாய'' என்ற தாரக மந்திரத்தையே உச்சரித்து வந்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தந்தையின் சீற்றம்

அந்த வைகுண்ட பதியைத் தன் எதிரியாகவே நினைத்து, வெறுத்து வந்த இரண்யன், தன் பிள்ளையின் நாராயண பக்தியைக் கண்டு, வெகுண்டான். கோபத்தினால் அவன் கண்கள் சிவந்தன. நெஞ்சு படபடத்தது. இருப்பினும், பிள்ளைப் பாசத்தினால், அடக்கிக் கொண்டு, பிள்ளைக்கு புத்திமதி கூறினான். ''அந்த நாராயணன் உன் பெரியப்பாவைக் கொன்றவன். நம் குலத்தின் எதிரி அவனைக் கொன்று, பழி தீர்க்க, அவனைத் தேடிக் கொண்டிருக்கிறேன். ஆதலால், அவன் மீது பக்தி செலுத்தாதே'' என்றான்.

ஆனால், பிரகலாதனோ, சாதாரண குழந்தை அல்லவே! பரம பாகவத உத்தமன் ஆயிற்றே! ஆதலால், அவன் தந்தை கூறிய அதர்மமான வார்த்தைகளை உதறித் தள்ளினான். குரு குலத்தில், தன் குரு சுக்கிராச்சாரியார் ''ஓம் இரண்யாய நம:'' என்று உபதேசித்த போது, அதனைக் கூற மறுத்து, ''ஓம் நமோ நாராயணாய'' என்ற தாரக மந்திரத்தைக் கூறியதுடன், தன் சக மாணாக்கர்களுக்கும் உபதேசித்தான். பயந்து போன சுக்கிராச்சாரியார், இரண்யனிடம் உண்மையைத் தெரிவித்துவிட்டார்.

பொங்கி எழுந்தான் இரண்யன். ''இனி நீ என் பிள்ளை இல்லை'' என்று கர்ஜித்தான். தன் ஆட்களை ஏவி, குழந்தை பிரகலாதனைக் கொன்று விடும்படி கட்டளையிட்டான். கதறினாள் கயாது. ஆனால், அந்தக் கொடிய அசுரன் எதையும் கேட்கவில்லை. ஒவ்வொரு முறை ஒவ்வொரு விதத்தில்

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரகலாதனைக் கொல்ல முயற்சித்தும், ஸ்ரீமந் நாராயணன் அக்குழந்தையைக் காப்பாற்றிவிட்டான்.

இறுதியில் ஒருநாள், கொடிய பாம்பின் விஷத்தைத் தன் மனைவி கயாதுவிடம் கொடுத்து, குழந்தை பிரகலாதனுக்குக் கொடுத்து, அருந்தும்படி நிர்ப்பந்தப்படுத்தினான். மூர்ச்சை அடைந்தாள் கயாது. குழந்தை பிரகலாதன், தானாகவே அந்த விஷத்தை எடுத்துக் குடித்துவிட்டான். ஆனால், அவனது உள் மனதில், சதா சர்வ காலமும் நிறுத்தி, மானஸீகமாக பூஜிக்கும் அந்த எம்பெருமான், அந்த விஷத்தைத் தான் ஏற்றுக் கொண்டான். விஷமும் அமுதமாயிற்று அக்குழந்தைக்கு.

''இந்த மாய வித்தைகள் அனைத்தும் அந்த மாயவனின் செயலே. அவனை ஒழித்தால் ஒழிய என் மகன் திருந்தமாட்டான். அவனை இப்பொழுதே, இந்த வினாடியே கண்டு பிடித்துக் கொல்வேன்'' என்று கர்ஜித்தான்.

குழந்தை பிரகலாதனின் தலை மயிரைப் பிடித்து இழுத்தான். ''நீ கூறும் அந்த ஹரி எங்கு இருக்கிறான்? உடனடியாகக் காட்டு...'' என்று கூவினான். குழந்தையைத் துன்புறுத்தினான். குழந்தை பயப்படவில்லை. ''எங்கும் நிறைந்தவனை எங்கிருக்கிறான் என்று கேட்கிறீர்களே என் தந்தையே? அவன் எங்கும் நிறைந்திருப்பவன். எப்பொழுதும் இருப்பவன் அவன். அவனைத் தேடி எவரும், எங்கும் போக வேண்டியதில்லை. தன்னை நம்பியவரிடம் எப்பொழுதும் இருக்கிறான் என் பிரபு'' என்று பதிலளித்தான் அந்தப் பாலகன்.

கேட்டதும், காட்டாற்று வெள்ளம் போல் பொங்கி எழுந்தது கோபம் அந்த அசுரனுக்கு. அந்த அரண்மனையின்

விசாலமான மண்டபத்தின் மேல் அவன் பார்வை விழுந்தது. அங்கு, சித்திர வேலைபாடுகள் அமைந்த ஒன்பது அழகிய, மிகப் பெரிய தூண்கள் இருந்தன.

கோபமோ, கட்டுக்கு அடங்காது சீறிக் கொண்டு, அவனையும் மீறி பொங்கி எழுந்தது. ''இந்தத் தூணில் இருப்பானா அந்த எனது எதிரி - நீ ஹரி என்று கூறுகிறாயே, எனது அந்தப் பரம வைரி?'' என்று கத்தினான். அவனது மனம் துவேஷத்தினால் வெறிபிடித்து, கட்டுக்கு அடங்காது போயிற்று.

குழந்தை பிரகலாதனோ, தந்தையின் கோபத்தைக் கண்டு அஞ்சவில்லை. ''நிச்சயமாக என் அந்த ஹரி, இந்தத் தூணில் என்ன, எந்தத் தூணிலும் இருப்பான். அவ்வளவு ஏன்? சிறு துரும்பிலும் நிறைந்திருப்பான் என் ஐயன்'' என்றான் குழந்தை.

''அப்படியானால், நான் இத்தனைக் காலமாக தேடிக் கொண்டிருக்கும் என் எதிரி, அந்த ஹரி இன்று என்னிடம் மாட்டிக் கொண்டான்'' என்று கூவியபடி, தன் பலம் அனைத்தையும் திரட்டி, அந்தத் தூண்களில் ஒன்றைத் தன் காலால் எட்டி உதைத்தான்.

அவன் உதைத்த அந்த ஒரு வினாடியில், அண்ட சராசரங்கள் அனைத்தும் அதிர்ந்தன. சூரிய, சந்திர கிரகங்கள்; நட்சத்திரங்கள் அனைத்தும் நிலை தடுமாறின. தவயோகத்தில் இருந்த மகரிஷிகளும் நடுங்கினர். கோடி சூரியன்கள் ஒரே சமயத்தில் உதயமானதைப் போன்ற பேரொளியுடன், இரண்டாகப் பிளவுபட்ட அந்தத் தூணிலிருந்து வெளிப்பட்டது, கண்டவர் நடுங்கி நிலை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குலையும்படியான ஒரு உருவம், சிங்க முகம். அடர்ந்த பிடரி, நீண்ட கூரிய பற்கள், நீண்ட நகங்கள், வானளாவிய உயரம், இரு கண்களும் கோபத்தினால் இரு தீப்பந்தங்கள் போல தீப்பிழம்பாக ஒளி வீசின. கழுத்திற்குக் கீழ் மனித உடல். அந்த சிங்க முகம் கர்ஜித்தது, இரண்ய கசிபுவைக் கண்டு. அது கர்ஜித்த சப்தம் ஈரேழு பதினான்கு உலகங்களிலும் எதிரொலித்தது. நதிகள் திசை மாறின. கடல் அலைகள் செயலற்று நின்றன.

ஆம்! குழந்தை பிரகலாதனைக் காப்பாற்ற நரசிங்கமாக அவதரித்துவிட்டான் ஆபத்பாந்தவனான, ஸ்ரீமந் நாராயணன்.

இரண்ய கசிபுவை அலக்காகத் தன் திருக்கரங்களினால் பிடித்துத் தூக்கி, அரண்மனை வாயிலுக்கு எடுத்துச் சென்றான் நரசிம்மன். மடிமேல் வைத்து, அவனது உடலைத் தன் கூரிய நகங்களால் கிழித்துக் கொன்றான். அப்போது, பகலும் இரவும் சேரும் மாலை நேரம்.

இரண்ய கசிபு வேண்டிக் கிடைத்த வரத்துக்கு ஏற்ப, அவனைக் கொன்றான் பகவான். வீட்டிற்கு உள்ளேயும் இல்லாமல், வெளியிலும் இல்லாத, வாயிற்படி அது. பகலோ, இரவோ இல்லாத அந்தி நேரம் அது. ஆயுதம் எதுவும் இல்லாமல் கூரிய நகங்களாலேயே கீறிக் கொல்லப்பட்டான் அந்த அரக்கன். மனிதனும் அல்ல, மிருகமும் அல்ல. மனித - மிருகம் - நர, சிங்கம் கலந்தவன் அந்த அகிலாண்ட நாயகன்.

இரண்யனைக் கொன்ற பின்பும், நரசிம்மனின் சீற்றம் தணியவில்லை. நாரதரை முன்னிட்டுக் கொண்டு, இந்திராதி தேவர்கள், மகாலட்சுமியை, நரசிம்மத்திடம் .சென்று,

கோபத்தைத் தணிக்குமாறு வேண்டினர். ஆனால், ஐயனை நெருங்குவதற்கே அஞ்சினாள் மகாலட்சுமியும்.

ஆனால், குழந்தை பிரகலாதனோ, சிறிதளவு பயமும் இல்லாமல், கூப்பிய கரங்களுடன் நரசிம்மனிடத்து அணுகினான். குழந்தை பிரகலாதனைக் கண்ட அந்த வினாடியே நரசிங்கத்தின் கோபம் தணிந்தது. குழந்தையைத் தன் திவ்ய கரங்களினால் வாரி எடுத்து அணைத்து, முத்தமிட்டுத் தன் மடிமேல் இருத்தி, வாஞ்சையுடன் தடவிக் கொடுத்தான்.

பிரகலாதன் செய்த பாக்கியத்தைக் கண்டு, ஈரேழு பதினான்கு உலகத்தினரும் மெய்சிலிர்த்தனர். பக்தர்களின் பெருமைக்கு ஈடிணையும் உண்டோ?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரசுராம க்ஷேத்திரத்தின் பவித்ரமான திருக்கோயில்கள்!

இதுவரை பார்க்காத - தரிசிக்காத - கேரள திருக்கோயில்களை எவ்விதமாவது தரிசித்து விடவேண்டும் என்ற ஆர்வம், சென்ற சில மாதங்களாகவே என் மனதில் கட்டுக் கடங்காது வளர்ந்து வந்தது.

அதன் விளைவுதான், சென்ற வாரம் நான் மேற்கொண்ட கேரள தேச புனிதப்பயணம். சுமார் 17 திருத்தலங்களை தரிசிக்கும் பேறு பெற்றேன். நான் அப்போது இவற்றில் ஆழ்வார்களால் மங்களா சாஸனம் (பாடல் பெற்ற) செய்யப்பட்ட வைணவத் திருத்தலங்களும், அபிமான தலங்களும், சிவ தலங்களும் அடங்கும்.

ஜமதக்கினி மகரிஷியின் புத்திரர் பரசுராமர். க்ஷத்திரிய மன்னன், கார்த்த வீரியார்ஜுனனின் புத்திரர்களால் ஜமதக்கினி, வஞ்சகமாக கொல்லப்பட்டார். அதற்குப் பழி வாங்குவதற்காக, க்ஷத்திரிய வம்ச மன்னர்கள் அனைவரையும் கொன்று, அடியோடு அழித்து, குருக்ஷேத்திர புண்ணிய பூமியில், க்ஷத்திரிய மன்னர்களின் இரத்தத்தையே அர்க்கியமாக விட்டு, திதி, தர்ப்பணம் ஆகியவற்றைச் செய்தார். பித்ரு பக்தரான பரசுராமர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வியாச பகவானின் அறிவுரையை ஏற்று, மனம் சமாதானமாகி, ''இனி போர் வேண்டாம்'' என்ற விரக்தியுடன், மேற்குக் கடற்கரையை அடைந்து, தன் ஆயுதமான பரசை, கடலினுள் வீசி எறிந்தார் பரசுராமர். அந்த பரசு சென்று வீழ்ந்த இடம்வரை, சமுத்திரராஜன் விலகி நின்றான். அந்த பூமியே புராதன காலத்தில் பரசுராம க்ஷேத்திரம் என்றும், தற்போது கேரள மாநிலம் என்றும் அழைக்கப்படுகிறது.

கேரளத்தின் திருக்கோயில்கள் அனைத்தும், எளிமையாகவும், ஆடம்பரம் இன்றியும், மிகவும் சுத்தமாகவும் நிர்வகிக்கப்பட்டு வருவதைக் கண்டு ஆச்சரியப்பட்டேன். பல திருக்கோயில்கள், மிகப்பெரிய அளவில் உள்ளன. வைகாநச, பாஞ்சராத்ர, ஆகம விதிகளின்படி, இத்திருக்கோயில்களில் பூஜைகள் நடைபெறவில்லை. அதற்கு மாறாக, அதர்வண வேதத்தில் உள்ள தாந்த்ரீக முறைப்படியே பூஜைகள் நடைபெறுகின்றன.

மன்னரானாலும் கருவறையில் அனுமதிப்பதில்லை

கருவறையில் எழுந்தருளியுள்ள மூர்த்தியின் வீர்யமும், சக்தியும் சிறிதளவும் குறைந்து விடாதபடி பார்த்துக் கொள்வதில், கண்ணும் கருத்துமாக உள்ளனர் இத்திருக்கோயில்களை நிர்வகிப்பவர்கள். வெளியில் இருந்து பக்தர்கள் கொண்டு வரும் புஷ்பங்கள், இறைவனுக்கு சாற்றப்படுவதில்லை. திருக்கோயிலினுள் சட்டை, பனியன் ஆகியவற்றை அணிந்து கொண்டு உள்ளே வருவதற்கு எவரும் அனுமதிக்கப் படுவதில்லை.

மா மன்னராகவே இருந்தாலும், கருவறையினுள் அனுமதிக்கப்படுவதில்லை.

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குறிப்பிட்ட நேரங்களில் கருவறை (நடை) திறக்கப்பட்டு பின்பு மூடப்பட்டு வருகிறது. தங்கள் இஷ்டம் போல் திறப்பதும், மூடுவதும் இங்கு கிடையாது. இதிலும் கண்டிப்பாக இருக்கிறார்கள்.

புகழ் பெற்ற நம் தமிழகத் திருக்கோயில்களின் கருவறையில், இறைவனுக்கு சற்று முன்பு படி ஒன்று இருக்கும். இதற்கு குலசேகரன்படி என்று பெயர். இதைக் கடந்து செல்ல, அர்ச்சகர்களுக்கு மட்டுமே அனுமதி உண்டு. அவரும் மூன்று முறைகள் கையைத் தட்டி, பின்பு கைகளைக் கூப்பி, அந்தப்படியில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள தேவதைகளை வேண்டி, அனுமதி பெற்று, அதன் பின்பே, அதனைத் தாண்டி, உள்ளே செல்ல வேண்டும். தமிழகத்தின் பல திருக்கோயில்களில் வி.ஐ.பி. என்று கூறப்படும் ''பெரிய'' மனிதர்கள் இந்த குலசேகரன் படியைத் தாண்டி உள்ளே நின்று தரிசிப்பதை, பலமுறை, நான் நேரில் கண்டிருக்கிறேன். திருக்கோயில்களின் புனித விதிகளைக் கண்டிப்பாகவும், உறுதியாகவும், கடைப்பிடித்து வருவதால், கேரள திருக்கோயில்களின் சக்தியும், வீர்யமும், சான்னித்தியமும் குறையாமல் இருந்து வருகின்றன.

ஒவ்வொரு திருக்கோயிலுக்கும், பெரிய அளவில் திருக்குளங்களும் உள்ளன. சில திருக்கோயில்கள், ஆற்றங்கரைகளில் இருக்கின்றன.

பஞ்ச பாண்டவர்கள் நிர்மாணித்த திருக்கோயில்கள்

திருவித்துவக்கோடு, திருநாவாய் போன்ற திருத்தலங்கள் முறையே குலசேகர ஆழ்வாராலும், நம்மாழ்வாராலும் பாடல் பெற்றவை. ஆதலால், 108

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வைணவ திவ்ய தேசங்களில் சேர்ந்தவையாக பூஜிக்கப்பட்டு வருகின்றன.

துரியோதனனின் சூழ்ச்சியினால், பஞ்சபாண்டவர்கள், தங்கள் தேவி திரௌபதியுடன், அஞ்ஞாத வாசம் - அதாவது பிறர் அறியாவண்ணம் - 12 ஆண்டுகள் காடுகளில் வாசம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானார்கள்.

அரண்மனையில் பிறந்து, சுகத்திலே வளர்ந்து, தங்கத் தட்டில் உண்டு, பட்டு மெத்தையில் உறங்கிய அந்த ஐந்து அரச குமாரர்களும், ராஜ கன்னிகையான திரௌபதியும், அடர்ந்த காடுகளில் மரங்களின் அடியில் காய்ந்த இலைகளைப் படுக்கையாகப் பரப்பி, தங்கள் கைகளையே தலையணையாக வைத்துக் கொண்டு படுத்து உறங்கினர் - காலத்தின் கொடுமையினால்.

இத்தகைய கொடிய துன்பங்களை அனுபவித்த போதிலும், அவர்கள் தங்களது தெய்வ நம்பிக்கையையும் தர்மத்தில் வைத்த பற்றுதலையும் விட்டுவிடவில்லை.

ஒற்றர்களை வைத்து, துரியோதனன் எவ்விதமாவது, வனவாச காலத்தில் கண்டுபிடித்துவிட்டால், மீண்டும் 12 ஆண்டுகள் வனவாசம் செய்ய வேண்டியிருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு, பஞ்ச பாண்டவர்களும், திரௌபதியை அழைத்துக் கொண்டு தென்திசை நோக்கி வந்து, பரசுராம க்ஷேத்திரம் என்ற கேரள தேசத்திற்கு வந்து சேர்ந்தனர்.

புண்ணிய நதியான பாரதப் புழையின் கரையில்

தங்களது அன்றாட பூஜைக்காக, எம் பெருமான் ஸ்ரீமந் நாராயணனுக்கு , தனித்தனியே ஐந்து கோயில்களை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீவித்துவக்கோட்டிலும், திருநாவாய் திருத்தலத்திலும் நிர்மாணித்தார்கள். இந்த திருக்கோயில்களே, பிற்காலத்தில் ஆழ்வார்களால் பாடல் பெற்ற இரு திவ்ய தேசங்களாகப் புகழ் பெற்றன.

அளவிலும், அழகிலும் தன்னிகரற்று விளங்கும் இத்திருக்கோயில்களின் அற்புத, தெய்வீகப் பொலிவு அனுபவித்தவர்களுக்கே தெரியும்.

இது போன்றே கேரள நாட்டில், திருப்பதி சாரம், திரு அனந்தபுரம், திருமூழிக்களம், திருக்கடி தானம், திருவல்லவாழ், திருவண்வண்டூர், திருப்புலியூர், திருவாறன்விளை ஆகிய வைணவ திவ்ய தேசங்களும், ஆழ்வார்களால் பாடப்பெற்ற பெருமை கொண்டவை ஆகும். இவை அனைத்தும், அளவற்ற தெய்வீக சக்தி பெற்றவையே.

பெரும்பாலும், இரு கரங்களிலும் சங்கு சக்கர ஹஸ்தனாக, வலது கையில் தாமரையும் , இடக்கையை இடுப்பில் வைத்தும், மோகனப்புன்னகையுடன் தரிசனம் அளிக்கிறான் எம்பெருமான் இத்திருக்கோயில்களில்.

இவை தவிர, வர்க்கலை (ஜனார்த்தனம்) போன்ற பல அபிமான தலங்களும் கேரளத்தில் உள்ளன.

பிறவியில் ஒரு முறையாவது சென்று, தரிசிக்க வேண்டிய அதியற்புத திருக்கோயில்கள் இவை. ஆழ்வார்கள் தரிசித்துப் பேரானந்தம் அடைந்த இந்த எம் பெருமான்களின் அழகை ஒவ்வொருவரும் கண்டு, தரிசித்துப் பிறவி தரும் பெரும் பயனை அடைய வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''தரு துயரம் தடாயேல் உன் சரண் அல்லால் சரண்
இல்லை
விரை குழுவும், மலர்ப்பொழில் சூழ் வித்துவக் கோட்டு
அம்மானே
அரிசினத்தால் ஈன்ற தாய் அகற்றிடினும், மற்றவள் தன்
அருள் நினைந்தே அழும் குழவி அது
போன்றிருந்தேனே!''

- குலசேகர ஆழ்வார், வித்துவக்கோடு பெருமானின் மீது பாடிய திவ்ய பிரபந்த பாசுரம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காயத்ரிமந்திரமும் பரிகாரங்களும்!

சூரியன் நம் கண்ணிற்குத் தெரியும் பிரம்மம். இதை வழிபட்டு உய்ய ராஜரிஷியான விசுவாமித்ரர் எனும் ஷத்திரியர் கண்டுபிடித்த மஹாமந்திரம் காயத்ரி. இதை இன்னார்தான் ஜபிக்கலாம், இன்னார் ஜபிக்கக்கூடாது என்பது அறவே கிடையாது. காயத்ரி மந்திரம் தத்துவம் யாருக்கு விளங்குகிறதோ அவர்கள் எல்லோரும் இதை ஜெபிக்கலாம். வேதத்தின் சாரமாக மகிமை வாய்ந்த இம் மந்திரம் எல்லோருக்குமே உரிய பொது சொத்து என்பது நிச்சயம். இதை மறுக்க முடியாது.

காயத்ரி உலகத்திற்குக் காரணமாக பராசக்தி ஆவாள். ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குண ரூபமாகவும் இருப்பவள். காயத்ரி மூன்று வேதங்களின் சாரம்.

வேதத்தின் ஸாரத்தைக் காண எண்ணிய பிரம்மதேவன் ரிக்வேதத்திலிருந்து 'பூ' என்ற சொல்லையும் யஜுர் வேதத்திலிருந்து 'புவ:' என்ற சொல்லையும், ஸாம வேதத்திலிருந்து 'ஸுவ:' என்ற சொல்லையும் எடுத்து காயத்ரி மந்திரத்தை உருவாக்கினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காலையில் ஜபிக்கப்படும் போது காயத்ரி என்றும், பகலில் ஜபிக்கப்படும் போது சாவித்ரி என்றும், மாலையில் ஜபிக்கப்படும் போது சரஸ்வதி என்றும் இந்த ஒரே மந்திரம் பல்வேறு பெயர்களைப் பெறுகிறது.

'காயத்ரீ பரமோ மந்த்ர: நமாதுர் தைவதம் பரம்' என்பது சாஸ்திர வசனம். காயத்ரியை விட சிறந்த மந்திரம் கிடையாது. தாயை விட சிறந்த தெய்வம் இல்லை என்பது இதன் பொருள். எல்லா நோய்களையும் போக்க 'ஏக மூலிகா பிரயோகம்' என்று ஒரே மூலிகையையே எல்லா நோய்களுக்கும் கொடுப்பது போல மந்திரங்களில் காயத்ரி எல்லா நன்மையையும் அளிக்கும்.

காயத்ரி மந்திரம் கூறும் இடங்களில் குழந்தைகள் அகால மரணமாக இறப்பதில்லை.

''நத்ரம்ரியதே பால: காயத்ரீ யத்ரஜப்யதே''

என்பது இதனை விளக்க வந்தது. எல்லாப் பாவங்களையும் போக்கக் கூடியது காயத்ரி என்பதை

ஸர்வ பாபானி நச்யந்தி
காயத்ரீம் யத்ர ஜப்யதே

என்ற சாஸ்திர வரிகள் விளக்க வந்தன.

காயந்தம் + த்ராயதே = காயத்ரீ

ஜபிப்பவனைக் காப்பாற்றுவது என்று பொருள். கண்ணன் கீதையில் 'நான் வேத சந்தங்களில் காயத்ரியாக இருக்கிறேன்' என்று கூறியுள்ளார்.

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காயத்ரியின் பொருள் என்ன வென்றால், நமது புத்தியை இயங்கச் செய்யும் சூரிய நாராயணனை நாம் வணங்குவோம் என்பதாகும். யார் நம் அறிவைத் தூண்டுகிறாரோ அந்த சுடர்க் கடவுளின் மேலான ஒளியை தியானிப்போம் என்பது இதன் விளக்கம்.

ஓம் பூர்புவஸ்ஸுவ:
தத்ஸ விதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தீயோயோன ப்ரசோதயாத்

என்பது பிரம்ம காயத்ரியாகும். இதுதான் விசுவாமித்திரர் கண்டுபிடித்தது. காயத்ரி மந்திரத்திற்கு 24 அட்சரங்கள். இது ஒவ்வொன்றையும் ஒரு ரிஷி கண்டுபிடித்ததாகக் கூறிக் கொள்வர். (விசுவாமித்திரருக்கு முழுப் பெருமையும் கொடுக்க மனமில்லாமல் என்று கூடக் கொள்ளலாம்)

24 ரிஷிகள்

1. வாமதேவர் 2. அத்திரி 3. வசிஷ்டர் 4. சுக்கிரர் 5. கண்வர் 6. பராசுரர் 7. விசுவாமித்திரர் 8. கபிலர் 9. சௌனகர் 10. யாக்ஞவல்கியர் 11. பாரத்வாஜர் 12. ஜமதக்னி 13. கௌதமர் 14. முத்கலர் 15. வியாசர் 16. லோமசர் 17. அகஸ்தியர் 18. கௌசிகர் 19. வத்ஸர் 20. புலஸ்தியர் 21. மாண்டூகர் 22. துர்வாசர் 23. நாரத்ர 24. க்சியபர்.

24 சந்தஸ்கள் (சந்தங்கள் ஒலியமைப்பு)

1. காயத்ரி 2. உஷ்ணிப் 3. அனுஷ்டுப் 4. பிரஹதி 5. பங்க்தீ 6.·திருஷ்டுப் 7. ஜகதீ 8. அதிஜகதீ 9. ஈஸ்வரி 10. அதிசக்வரி 11. திருதி 12. அதிதிருதி 13. விராட் 14. பிரஸ்தார

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பங்க்தீ 15. கிருதி 16. பிரகிருதி 17. ஆகிருதி 18. விகிருதி 19. சங்கிருதி 20. அட்சர பங்க்தீ 21. பூ 22. புவ 23 ஸுவ 24. ஜோதிஷ்.

24 தேவதைகள்

1. ஆக்னேயம் 2. பிரஜாபத்யம் 3. சௌம்யம் 4. ஈசானம் 5. சாவித்ரம் 6. ஆதித்யம் 7. பார்ஹஸ்பத்யம் 8. மைத்ரா வருணம் 9. பகதைவதம் 10. ஆர்யமனிஸ்வரம் 1 .. கணேசம் 12. துவாஷ்டிரம் 13. பௌஷ்ணம் 14. ஐந்திராக்னம் 15. வாயல்யம் 16. வாமதேவ்யம் 17. மைத்ராவருணி 18.ருத்ரதைவதம் 19. கௌபேரம் 20. ஆச்வினம் 21. வருணம் 22. அர்க்கம் 23. வாசிகம் 24. விசுவேதேவர்.

24 சக்திகள்

1. வாமதேவி 2. பிரியை 3. ஸத்யா 4. விச்வர 5. பத்ரவிலாஸினி 6. பிரபாவதி 7. ஜெயா 8. சாந்தா 9. காந்தா 10. துர்க்கா 11. சரஸ்வதி 12. வித்ருமா 13. விசாலேசா 14. வியாபினீ 15. விமலா 16. தமோபா 17. சூஷ்மா 18. விசுவயோனி 19. ஜயாவசா 20. பத்மாலயா 21. பராசோபா 22. பத்ரா 23. ஹாரிணி 24. திரிபதா

24 நிறங்கள்

1. சம்பகம் 2. காயாம்பு 3. பவளம் 4. பளிங்கு 5. தாமரை 6. இளம்சூரியன் 7. சங்கு 8. சந்திரன் 9. இளம் தாமரை 10. பத்மராகம் 11. இந்திர நீலம் 12. முத்து 13. குங்குமம் 14. மை 15. ரக்தம் (சிவப்பு) 16. வைடூரியம் 17. தேன் 18. மஞ்சள் 19. சூரியகாந்தி 20. கிளிப்பச்சை 21. சதபத்ரம் 22. தாழை மல்லிகை 23. மல்லிகை 24. அவரி.

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

24 தத்துவங்கள்

1. பிருத்வி (மண்) 2. அப்பு (நீர்) 3. தேயு (தீ) 4. வாயு (காற்று) 5. ஆகாயம் ஆகிய ஐம்பூதங்கள் 6. சுவை 7. ஒளி 8. ஊறு 9. ஓசை 10. நாற்றம் ஆகிய ஐந்து தன்மாத்திரைகள் 11. கை 12. கால் 13. சிறுநீர்ப்புறவழி 14. மலவாய் 15. கடுவாய் ஆகிய ஐந்து கர்மேந்திரியங்கள் 16. மூக்கு 17. கண் 18. வாய் 19. செவி 20. மெய் (உடம்பு) ஆகிய ஐந்து ஞானேந்திரியம் 21. பிராணன் 22. அபானன் 23. வியானன் 24. சமானன் முக்கிய வாயுக்கள்.

இந்த காயத்ரி மந்திரத்தை 24 லட்சம் தடவை பால் அல்லது தயிரால் ஹோமம் செய்தால் ராஜவசியம் ஏற்படும்.

சங்கு புஷ்பத்தால் தினம் 1008 முறை வீதம் 24 நாள் ஹோமம் செய்தால் குஷ்ட நோய் தீரும்.

நாயுருவி அரசு ஸமித்துக்களால் (குச்சி) 1008 ஹோமம் செய்ய வலிப்பு நோய் பறந்து போகும்.

அத்திக்குச்சியால் 1008 முறை மூன்று நாள் செய்ய மனநோய் மற்றும் தோல் நோய் நீங்கும்.

ஒரு லட்சம் தாமரை மலர்களால் ஒரே நாளில் ஹோமம் செய்ய செல்வவளம் கொட்டும்.

அத்தி, ஆல், அரசு முதலியவைகளால் மகம் நட்சத்திரம் தொடங்கி அடுத்த ஆயில்யம் முடிய 27 நாள் ஹோமம் செய்தால் மனிதர், பசு, யானை, குதிரை மற்ற விலங்கினங்களுக்கு நோய் அண்டாது. முற்காலத்தில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

போர்க்காலங்களில் அரசர்கள் இத்தகைய உத்தியைக் கையாண்டனர்.

பொரியாலும் பால் நெய் தேன் கலந்த திரிமதுரத்தாலும் 2400 முறை ஹோமம் செய்ய நல்ல மணமகள் அல்லது மணமகன் கிடைப்பான்.

மேற்கண்ட ஹோமம் செய்ய முடியாதவர்கள் அதே அளவு ஜபம் செய்தால் பாதிப்பங்கு பலன் கிடைக்கும். இருபத்தி ஏழு நாள் அதிகாலை நீரில் நின்று தினம் மூவாயிரம் வீதம் மொத்தம் ஐம்பத்தோராயிரம் ஜபித்தால் உடனே மழை பொழியும். பாயஸம், தும்பை, நொச்சி இவைகளால் லட்சம் முறை நதிக்கரையில் ஹோமம் செய்தால் பருவமழை தவறாது.

மூன்று நாள் உப்பின்றி அலவணம் ஆக (லவணம் என்றால் உப்பு. அலவணம் உப்பு இன்மை). இனிப்பு மட்டும் சாப்பிட்டு சீந்தில் கொடியால் ஹோமம் செய்தால் யமபயம் நீங்கும். ஐயாயிரம் முறை நீரில் நின்று ஜபித்து ஆயிரம் முறை வெண்கடுகால் ஹோமம் செய்தால் பில்லிசூனியம் அகலும். எதிரிகளும் நாசமடைவர். வெண்தாமரையால் ஆயிரம் முறை ஹோமம் செய்யக் கல்வி மேன்மை. தேவி பாகவதம் 12ம் ஸ்கந்தம் (பிரிவு) மஹாபாரதம் அனுசாஸன பர்வம் ஆகியவை காயத்ரி மந்திரத்தின் பெருமை பற்றிப் பேசுகின்றன.

காயத்ரி தேவிக்கு ஐந்து முகங்கள். பத்துக் கைகள். ஒவ்வொரு முகங்களிலும் மூன்று கண்கள். தலையில் பிறைச்சந்திரக்கலை இவற்றுடன் காட்சி தருகிறாள். பிரம்ம, விஷ்ணு, சிவ ஸ்வரூபமாகவும், சரஸ்வதி, லக்ஷ்மி, பராசக்தி

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ரூபமாகவும் ஒரு சேர விளங்குபவள் காயத்ரி அன்னை ஆவாள்.

இனி பல்வேறு காயத்ரி மந்திரங்களைக் தங்களின் விருப்பம் கருதி அரிதின் முயன்று ஒரு சேர அளித்துள்ளேன். (நம் வழக்கத்தில் உள்ள பிரம்ம காயத்ரி இக்கட்டுரையின் தொடக்கத்தில் தரப்பட்டு விட்டது.)

1. ஸ்ரீகணேச காயத்ரி (எடுத்த காரியம் ஜெயமடைய)

ஓம் வக்ரதுண்டாய வித்மஹேலம்போதராய தீமஹி
தன்னோ தந்தி ப்ரசோதயாத்.

2. ஸ்ரீகோபால காயத்ரி (பால்வளம், பசுவளம் பெருகிட)

ஓம் கோபாலாய வித்மஹே கோபி ஜன வல்லபாய தீமஹி
தன்னோ கோபால ப்ரசோதயாத்.

3. ஸ்ரீகிருஷ்ண காயத்ரி (பிள்ளைப் பேறு அடைய)

ஓம் தேவகி நந்தனாய வித்மஹே வாஜு தேவாய தீமஹி
தன்னோ கிருஷ்ண ப்ரசோதயாத்.

4. ஸ்ரீதாமோதர காயத்ரி (சிறைவாசம் விடுபட)

ஓம் தாமோதராய வித்மஹே வாஸுதேவாய தீமஹி
தன்னோ தாமோதர ப்ரசோதயாத்

5. ஸ்ரீபரசுராம காயத்ரி (வெற்றி வீரனாய்த் திகழ)

ஓம் ஜாமதக்னாய வித்மஹே மஹா வீராய தீமஹி
தன்னோ பரசுராம ப்ரசோதயாத்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

6. ஸ்ரீராம காயத்ரி (மனம் அமைதி பெற)

ஓம் தாசரதாய வித்மஹே சீதாவல்லபாய தீமஹி
தன்னோ ராம ப்ரசோதயாத்.

7. ஸ்ரீசீதா காயத்ரி (பொறுமை காத்திட)

ஓம் ஜனகஜாயை வித்மஹேராமப்ரியாயை தீமஹி
தன்னோ ராம ப்ரசோதயாத்.

8. ஸ்ரீஹனுமத் காயத்ரி (காரியத்தடை நீங்க)

ஓம் அஞ்ஜனீஸுதாய வித்மஹே வாயுபுத்ராய தீமஹி
தன்னோ ஹனுமத் ப்ரசோதயாத்.

9. ஸ்ரீதுளசி காயத்ரி (கற்பில் சிறந்து விளங்க)

ஓம் துளஸீயாய வித்மஹே திரிபுராரீயாய தீமஹி
தன்னோ துளஸி ப்ரசோதயாத்.

10. ஸ்ரீதத்தாத்ரேய காயத்ரி (மகான்கள் ஆசி பெற)

ஓம் தத்தாத்ரேயாய வித்மஹே திகம்பராய தீமஹி
தன்னோ விஷ்ணு ப்ரசோதயாத்.

11. ஸ்ரீநாராயண காயத்ரி (மரணபயம் நீங்கிட)

ஓம் நாராயணாய வித்மஹே வாசுதேவாய தீமஹி
தன்னோ ருத்ர ப்ரசோதயாத்.

12. ஸ்ரீருத்ர காயத்ரி (பித்ரு சாபம் அகல)

ஓம் தத்புருஷாய வித்மஹே மஹாதேவாய தீமஹி
தன்னோ ருத்ர ப்ரசோதயாத்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

13. ஸ்ரீநந்தி காயத்ரி (அதிகாரம் பெற)

ஓம் தத்புருஷாய வித்மஹே சக்ரதுண்டாய தீமஹி
தன்னோ நந்தி ப்ரசோதயாத்.

14. ஸ்ரீதுர்க்கா காயத்ரி (தைரியம் பெற)

ஓம் காத்யாயனாய வித்மஹே கன்யாகுமார்யை தீமஹி
தன்னோ துர்க்கி ப்ரசோதயாத்.

15. ஸ்ரீலக்ஷ்மி காயத்ரி (பணவரவு)

ஓம் மஹா தேவ்யைச வித்மஹே விஷ்ணுபத்னையச தீமஹி
தன்னோ லக்ஷ்மி ப்ரசோதயாத்.

16. ஸ்ரீசரஸ்வதி காயத்ரி (கல்வியில் மேன்மை)

ஓம் ஐம் வாக்தேவ்யை ச வித்மஹே காமராஜாயை தீமஹி
தன்னோ தேவி ப்ரசோதயாத்.

17. ஸ்ரீஹயக்ரீவ காயத்ரி (உயர்கல்வி)

ஓம் வாகீச் வராய வித்மஹே ஹயக்ரீவாய தீமஹி
தன்னோ ஹம்ஸ ப்ரசோதயாத்

18. ஸ்ரீநருஸிம்ம காயத்ரி (பகை வெல்ல)

ஓம் வஜ்ரநகாய வித்மஹே தீக்ஷ்ண தம்ஷ்ட்ராய தீமஹி
தன்னோ நரசிம்ம ப்ரசோதயாத்.

19. ஸ்ரீஅன்னபூர்ணா காயத்ரி (உணவு கிடைக்க)

ஓம் பகவத்யை ச வித்மஹே மாஹேச்வர்யை தீமஹி·
தன்னோ அன்னாபூர்ணா ப்ரசோதயாத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

20. ஸ்ரீகாளி காயத்ரி (சத்ரு நாசம்)

ஓம் காளிகாயை வித்மஹேச் மசானவாஸின்யை தீமஹி
தன்னோ கோர ப்ரசோதயாத்.

21. ஸ்ரீபகளாமுகி காயத்ரி (ஸ்தம்பனம் செய்ய)

ஓம் பகளாமுக்யை ச வித்மஹே ஸ்தம்பின்யை ச தீமஹி
தன்னோ தேவி ப்ரசோதயாத்.

22. ஸ்ரீசின்னமஸ்தா காயத்ரி (பெண் தொடர்பு அகல)

ஓம் வைரோசின்யை ச வித்மஹே சின்னமஸ்தாயை தீமஹி
தன்னோ தேவி ப்ரசோதயாத்.

23. ஸ்ரீ புவனேச்வரி காயத்ரி (உலக வசியம்)

ஓம் நாராயண்யை ச வித்மஹே புவனேஸ்வரியை ச தீமஹி
தன்னோ தேவி ப்ரசோதயாத்.

24. ஸ்ரீமாதங்கி காயத்ரி (கலைகளில் மேன்மை பெற)

ஓம் மாதங்க்யை ச வித்மஹே உச்சிஷ்ட சண்டாள்யை தீமஹி
தன்னோ தூம ப்ரசோதயாத்

25. ஸ்ரீதாரா காயத்ரி (வெளிநாடு செல்ல)

ஓம் தாராயை ச வித்மஹே மனோக்ராஹாயை தீமஹி
தன்னோ தேவி ப்ரசோதயாத்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

26. ஸ்ரீவாராஹி காயத்ரி (வழக்கறிஞர்களுக்கும் அரசியல்வாதிகட்கும்)

ஓம் மஹிஷத்வஜாயை வித்மஹே தண்ட ஹஸ்தாயை தீமஹி
தன்னோ வாராஹிப் ப்ரசோதயாத்.

27. ஸ்ரீகருட காயத்ரி (விஷ பயம் நீங்கிட)

ஓம் தத்புருஷாய வித்மஹே ஸுவர்ண பக்ஷாய தீமஹி
தன்னோ அர்ஜுன ப்ரசோதயாத்.

28. ஸ்ரீகார்த்தவீர்ய காயத்ரி (கடன் நீங்கிட)

ஓம் கார்த்த வீர்யாய வித்மஹே மஹாவீர்யாய தீமஹி
தன்னோ கருட ப்ரசோதயாத்.

29. ஸ்ரீகாமதேனு காயத்ரி (எல்லா வளமும் பெருகிட)

ஓம் ஸுபகாயை வித்மஹே காமநாத்ரியை ச தீ மஹி
தன்னோ தேனு ப்ரசோதயாத்.

30. ஆதித்ய காயத்ரி (கண்நோய் தீர்ந்திட)

பாஸ்கராய வித்மஹே மஹாத்யுதிகராய தீமஹி
தன்னோ ஆதித்ய ப்ரசோதயாத்.

31. ஸ்ரீமஹாமாரி·காயத்ரி (வெம்மை நோய்கள் தீர்ந்திட)

ஓம் பிசாசத்வஜாயை வித்மஹே கட்க ஹஸ்தாயை தீமஹி
தன்னோ மாரி ப்ரசோதயாத்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

32. ஸ்ரீசாஸ்த்ரு காயத்ரி (ஐயப்பன் அருள் பெற்றிட)

ஓம் பூதாதிபாய வித்மஹே மஹா தேவாய தீமஹி
தன்னோ சாஸ்த்ரு ப்ரசோதயாத்.

33. ஸ்ரீசூலினி காயத்ரி (செய்வினை தீர்ந்திட)

ஓம் தும் ஜ்வாலா மாலினி வித்மஹே மஹாசூலினி தீமஹி
தன்னோ துர்க்கா ப்ரசோதயாத்.

34. ஸ்ரீசுதர்சன காயத்ரி (சதிகளை முறியடிக்க)

ஓம் சுதர்சனாய வித்மஹே மஹாஜ்வாலாய தீமஹி
தன்னோ சக்ர ப்ரசோதயாத்.

35. ஜயதுர்க்கா காயத்ரி (முயற்சிகளில் வெற்றி)

ஓம் நாராயண்யை வித்மஹே துர்க்காயை ச தீமஹி
தன்னோ கௌரீ ப்ரசோதயாத்.

36. ஸ்ரீஷண்முக காயத்ரி (செவ்வாய் தோஷம் தீர)

ஓம் தத்புருஷாய வித்மஹே மஹாஸேனாய தீமஹி
தன்னோ ஷண்முக ப்ரசோதயாத்.

37. ஸ்ரீஹம்ஸ காயத்ரி (பிராணாயாமம் போன்ற யோகங்கள் சித்தி பெற)

ஓம் பரமஹம்ஸாய வித்மஹே மஹா ஹம்ஸாய தீமஹி
தன்னோ ஹம்ஸ ப்ரசோதயாத்.

38. கௌரி காயத்ரி (திருமணத்தடை நீங்கிட)

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஓம் ஸுபகாயை வித்மஹே காம மாலின்யை தீமஹி
தன்னோ கௌரி ப்ரசோதயாத்.

39. ஸ்ரீதட்சிணா மூர்த்தி காயத்ரி (குருபலன் பெற்றிட)

ஓம் தட்சிணா மூர்த்தயே வித்மஹே த்யான ஹஸ்தாய தீமஹி
தன்னோ தீச ப்ரசோதயாத்.

40. ஸ்ரீசிவ காயத்ரி (மறுமையில் முக்தி பெற்றிட)

ஓம் தன் மஹசாய வித்மஹே வாக்விசுத்தாய தீமஹி
தன்னோ சிவ ப்ரசோதயாத்

41. ஸ்ரீயம தர்மராஜ காயத்ரி (மரணத்தில் இனிமை)

ஓம் தர்மராஜாய வித்மஹே கலட காலாய தீமஹி
தன்னோ யம: ப்ரசோதயாத்.

42. சித்ரகுப்த காயத்ரி (பாவங்கள் குறைந்திட)

சித்ரகுப்தாய வித்மஹே கர்ணகி வல்லபாய தீமஹி
தன்னோ தீச ப்ரசோதயாத்.

43. குபேர காயத்ரி (திடீர் பண வரவு)

ஓம் குபேராய வித்மஹே நரவாஹனாய தீமஹி
தன்னோ தீச ப்ரசோதயாத்.

44. ஸ்ரீராகவேந்திரா காயத்ரி (கேட்பதைப் பெற்றிட)

ஓம் ஸ்ரீராகவேந்த்ராய வித்மஹே நரவாஹனாய தீமஹி
தன்னோ தீச ப்ரசோதயாத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

45. ஷீர்டி சாயி பாபா காயத்ரி (குருவருள் பெற்றிட)

ஓம் ஸாயிராமாய வித்மஹே ஆத்மாராமாய தீமஹி
தன்னோ குரு ப்ரசோதயாத்.

46. ஸ்ரீசத்யசாயிபாபா காயத்ரி (நினைத்ததைப் பெற்றிட)

ஓம் பர்த்தீசாய வித்மஹே ஸாயிராமாய தீமஹி
தன்னோ குரு ஸாயி ப்ரசோதயாத்.

47. பிரணவ காயத்ரி (மந்திர ஜபம் சித்திக்க)

ஓம் ஓங்காராய வித்மஹே பவதாணாய தீமஹி
தன்னோ பிரணவ ப்ரசோதயாத்.

48. சங்க காயத்ரி (வழக்கு வெற்றி அடைய)

பாஞ்ச ஜன்யாய வித்மஹே பவமானாய தீமஹி
தன்னோ சங்க ப்ரசோதயாத்.

காயத்ரி மந்திரத்தை இக்கட்டுரையின் தொடக்கத்தில் நான் எழுதியது போல யாரும் ஜபிக்கலாம். மதம், இனம், குலம், மொழி பேதமின்றி யாரும் உச்சரிக்கலாம். ‘செங்கதிர்த் தேவே! சிறந்த ஒளியினைத் தேடுகின்றோம். நீ எங்கள் அறிவினைத் தூண்டி வழி நடத்துக’ என்ற காயத்ரியின் தமிழாக்கத்தைக் கூடக் கூறலாம்.

பாரத நாட்டின் ஆன்மீக விழிப்பிற்காக காயத்ரி என்னும் வேதமாதாவின் தேசிய மந்திரத்தை நாம் அனைவரும் ஒன்று கூடி ஒரே மூச்சில் உச்சரித்து நம் பாரதம் மிகப் பெரும் வல்லரசாக தியானிப்போம். நமாமி வேத மாதரம்! வந்தே மாதரம்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முத்தொடு பவளம் தங்கம் முரண்படு கருமை வெண்மை இத்தனை நிறங்கள் கொஞ்சும் எழில் முகம் ஐந்தும் கொண்ட உத்தமி ஒவ்வொன்றிற்கும் விழிகள் மூன்றுடைய அன்னை தத்துவ எழுத்து ரூபம் தாங்கிய எங்கள் தேவி!

இரண்டு தாமரைகள், சங்கு, ஏவுசக்கரம் கபாலம் மிரண்டவர்க்கு அபயம் தாளில் விழுந்திடில் வரதம் இன்னும் அங்குசம், கயிறு, சாட்டை ஆகிய பத்தும் கொண்டே திங்களின் கலை கொள் மௌலித்தேவி காயத்ரி போற்றி, ஒளியினை பதினான்கெனும் உலகினுக்கு உதவி ஞான வெளியில் உலவும் அந்த வெய்யவன் தனக்கும் வற்றா அளியினால் ஒளியை ஊட்டி ஆண்டிடும் பொருளே! நல்ல தெளிவினைத் தந்து அஞ்ஞான இருளினை ஒழிப்பாய் தேவி!

ரிஷப லக்னத்தில் இந்தியா சுதந்திரம் பெற்றது. லக்னத்தில் ராகுவும், 7-ல் கேதுவும், இடையில் அனைத்து கிரகங்களும் அமையக் காலசர்ப்ப யோகம் அமைந்தது. இரண்டாவது சுற்று ஏழரைச் சனி நடப்பதால் இந்தியாவுக்கு யோகமே. மேலும் சுக்ரதசை நடப்பதாலும் இந்தியா மாபெரும் வல்லரசாகும் நாள் அதிக தூரத்தில் இல்லை. ராகு, கேது பிடிக்குள் சுதந்திர லக்னம் இருப்பதால் அம்பாளை முழுமனதுடன் ஒவ்வொரு இந்தியனும் ஆராதிக்க, நமது இணையற்ற தலைவர்கள் மூலம் அகண்ட பாரதமும், அதன் எல்லைகளும் நாற்புறமும் விரிவடையும். இந்தியாவின் ஜன்ம லக்னம் மகரம் கிரீன்விச் ரேகைப்படி அமைகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செல்வத்தை மட்டும் வைத்துக் கொண்டு என்ன செய்வது?

வட்டிக்கடை வைத்து, வியாபாரம் செய்து வந்தவர் மாதவராவ். அவரது மனைவி ரத்தினாபாய். கணவர் சொல்லைத் தட்டாத உத்தமி.

மாதவராவ் மிகவும் கண்டிப்பானவர். வட்டிக்கடை நடத்துவது என்றால் சுலபமா? கண்டிப்பாக இருந்தால் தானே அதை நடத்த முடியும். செல்வமும் சேர்ந்தது. செல்வம் வந்தால், பெயருக்கும், புகழுக்கும் கேட்பானேன்.

ஆனாலும், அவர்களுக்கு பெரிய குறை ஒன்று இருந்தது. அது என்ன குறை?

குழந்தைப் பாக்கியம் இல்லாத குறைதான் அது.

இறைவனும், கண்திறந்து பார்த்துவிட்டான் ஒரு நாள், ஏக்கத்தைத் தீர்க்க, ரத்தினாபாயும் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். கண்டிப்பு தான் சற்று அதிகமே தவிர, மற்றபடி தெய்வ பக்தி மிகுந்தவர் மாதவராவ், குழந்தைக்கு ரகுநாதன் என்று, ஸ்ரீராம பிரானின் பெயரையே சூட்டி மகிழ்ந்தார் அவர்.

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நெடு நாட்கள் தவமிருந்து பெற்ற மகன் அல்லவா! சீரும், சிறப்புமாக, சீராட்டி வளர்த்தாள் ரத்தினாபாய்.

குழந்தையும், ''நாள் ஒரு மேனியும், பொழுது ஒரு வண்ணமும்'' என்று கூறுவார்களே, அதே போன்று வேகமாக வளர்ந்தான். விரைவில், வாலிபப் பருவத்தையும் எட்டி விட்டான்.

தக்க வயதில், பக்தி நிறைந்த குடும்பத்தில் பிறந்த லக்ஷ்மீபாய் என்ற பெண்ணை ரகுநாதனுக்கு பெற்றோர்கள் மணம் முடித்து வைத்தனர்.

தொழிலில் கெட்டிக்காரன் ரகுநாதன். இளைஞன் அல்லவா? ஆர்வத்துடன் உழைத்தான். லாபம் அதிகரிக்க, அதிகரிக்க, அவனது ஆசையும் வளர்ந்தது. பணத்தாசை, பண வெறியாக மாறியது. அநியாய வட்டி வாங்க ஆரம்பித்தான் ரகுநாதன். செல்வம் சேர்ப்பதிலேயே, தன் நேரம் அனைத்தையும் செலவிட்டதால், இறைவனை வணங்குவதையும், தினசரி பூஜைகளையும் விட்டு விட்டான். எப்பொழுது பார்த்தாலும், பணம் பணம் என்று பணத்தைப் பற்றிய நினைவுதான்.

கணவரின் பண வெறியையும், கஞ்சத்தனத்தையும் கண்டு லக்ஷ்மீபாய் மனம் வருந்தினாள். பண்டரீபுரத்தில் எழுந்தருளியுள்ள கண்ணன் - ஸ்ரீபாண்டுரங்கனிடம் - அளவற்ற பக்தி கொண்டவள் அவள். தன் கணவருக்கு நல்ல புத்தியைத் தந்தருளுமாறு தினமும் வேண்டி வந்தாள் அந்த உத்தமி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்நிலையில், அவர்களுக்கு அழகான பெண் குழந்தை ஒன்றும் பிறந்தது. அக்குழந்தைக்கு ருக்மணி என்று பெயரிட்டனர் பெற்றோர்.

குழந்தை பிறந்த பின்பும், ரகுநாதனின் மனதில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை. லக்ஷ்மீபாய் மனம் நொந்து கண்ணீர் வடித்தாள்.

லக்ஷ்மீபாய்க்கு மனம் இரங்கிய பண்டரிநாதன்

உத்தமி லக்ஷ்மீ கண்ணீர் வடித்து, வருந்துவதைக் கண்ட பாண்டுரங்கன் திருவுள்ளம் இரங்கினான். ரகுநாதனை மாற்றி ஆட்கொள்ள, ஒரு லீலையைச் செய்ய திருவுள்ளம் கொண்டான்.

அன்று ஒரு நாள்! ரகுநாதன் தன் கடையில் உட்கார்ந்து கொண்டு வட்டி வியாபாரம் செய்து கொண்டிருந்தான். அப்போது வயதான, ஒரு தொண்டுகிழவர் அவன் கடைக்கு வந்தார். தள்ளாடித் தள்ளாடி வந்த அந்த 'குடு குடு' கிழவர், ரகுநாதனைப் பார்த்து, ''ஐயா! நான் ஏழை, வயதும் அதிகமாகி விட்டது. என் மகனுக்கு பெண் பார்த்து, திருமணம் நிச்சயமாகி உள்ளது. கையிலோ பணம் இல்லை. நீங்கள்தான் ஒரு ஆயிரம் வராகன் (அந்த நாளில், தங்கக் காசு) கொடுத்து உதவ வேண்டும். மகத்தான புண்ணியம் கிடைக்கும் உங்களுக்கு...'' என்று கெஞ்சினார், மன்றாடினார்.

ரகுநாதனா கொடுப்பான்? கிழவரின் கெஞ்சலுக்கு சிறிதும் மசியவில்லை. காலா காலத்தில் பணத்தை சம்பாதிக்காமல் இப்போது ஏன் பிச்சை எடுக்கிறீர்?'' - என்று கூவினான். கிழவரோ சிறிதளவும் கோபப்பட்டாமல், புன்

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிரிப்பால், தன் மன வேதனையை மறைத்துக் கொண்டார். ''விடாக்கண்டனாக இருப்பார் போலிருக்கிறதே!'' என்று நினைத்துக் கொண்டான் ரகுநாதன். கடையை விட்டுத் திரும்பினார் அந்தக் கிழவர். நேராக ரகுநாதனின் வீட்டிற்குச் சென்றார். வந்த வயோதிகப் பெரியவரை, முகமன் கூறி, வீட்டிற்குள் அழைத்து உட்கார வைத்து, வணங்கினாள் லக்ஷ்மீபாய். பொக்கைவாயால் ஆசி கூறினார் அந்தப் பெரியவர்.

பின்பு பேசினார் அவர். ''அம்மா! எனக்கு இருப்பது ஒரே மகன். அவனுக்கு நல்லபடி திருமணம் நடக்க வேண்டும். உன் உதவி கோரி வந்திருக்கிறேன். தள்ளாத வயதில் நான் எங்கு செல்வேன்?'' என்று கண்களில் நீர் மல்கக் கெஞ்சினார்.

லக்ஷ்மீபாய் அளவற்ற இரக்க குணம் உள்ளவள். அவளிடம் பணம் இல்லை. கணவன் ரகு, அவளிடம் பணம் என்று எதுவும் கொடுப்பதில்லை. அவளும் கேட்பதில்லை. இப்போது அவளிடம் இருப்பது ஒரே ஒரு வைர மூக்குத்திதான். அது விலை உயர்ந்த வைரங்கள் இழைக்கப்பட்ட மூக்குத்தி. தன் அழகிற்காக, தன் மூக்கில் இருப்பதை விட, ஒரு திருமணத்தையே நடத்தி வைத்து, அந்த வயதானவரின் ஆசையை நிறைவேற்றி வைப்பது எத்தனை புண்ணிய காரியம்? மூக்குத்தியைக் கழற்றிக் கொடுத்தாள். இது நல்ல விலைக்கு போகும். விற்று தங்கள் அன்புப் பிள்ளையின் திருமணத்தை நடத்துங்கள். ஆனால், என் கணவருக்கு மட்டும் இது தெரிய வேண்டாம். சென்று வாருங்கள்...'' என்று அவசர அவசரமாக நடுக்கத்துடன் அவரை அனுப்பி வைத்தாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அங்கு....! ரகுநாதனின் கடையில்!!

வைர வியாபாரி ஒருவன் ரகுநாதனின் கடைக்கு வந்தான். வைர வியாபாரி ஆயிற்றே! வரவேற்பு சற்று பலமாகவே இருந்தது. தன்னிடம் உள்ள உயர்ந்த வைர மூக்குத்தி ஒன்றை விற்க வந்திருப்பதாகக் கூறி, அந்த வைர மூக்குத்தியைக் காண்பித்தான்.

ஒரு கணம் மூக்குத்தியை உற்றுப்பார்த்தான் ரகுநாதன். திடுக்கிட்டான். மீண்டும், மீண்டும் அதனைப் பார்த்தான். சந்தேகமே இல்லை. நம் மனைவியின் மூக்குத்திதான் அது! ஆனால், அது எப்படி, இந்த வியாபாரியிடம் வந்தது? பிற ஆண்களுடன் பேசாதவள் ஆயிற்றே தன் மனைவி! குழம்பினான்.

வியாபாரி விலையைக் கூறினான். சம்மதிப்பது போல் நடித்தான் ரகுநாதன். பணம் எடுத்துக் கொண்டு வருகிறேன் என்று கூறி, வீட்டிற்குச் சென்றான்.

''லக்ஷ்மீ! லக்ஷ்மீ! உன் வைர மூக்குத்தியை எடுத்து வா'' என்றான். நடுங்கினாள் லக்ஷ்மீ. பாண்டுரங்கனை மனதால் சரண் அடைந்தாள். ''ஐயனே நான் என்ன செய்வேன்?'' என்று கலங்கினாள். ''எங்கோ வைத்து விட்டேன், தேடி எடுக்கிறேன்'' என்று கூறி, நகைப்பெட்டிக்குள் தேடுவதைப் போல் பாவனை செய்தாள்.

என்ன ஆச்சரியம்! அதில் அழகான, விலை மதிப்பற்ற வைர மூக்குத்தி ஒன்று இருந்தது. அதைப் பார்த்த ரகுநாதன் திடுக்கிட்டான். ஏனெனில், அந்த வைர மூக்குத்தி அவனால் மதிப்பிட முடியாத அளவிற்கு உயர்ந்ததாக இருந்தது.

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உண்மையை கூறும்படி, லக்ஷ்மீபாயை வற்புறுத்தினான். நடந்தவை அனைத்தையும் உள்ளபடி கூறினாள் லக்ஷ்மீ. தன்னை மன்னித்து விடும்படி வேண்டினாள்.

அதே சமயத்தில், அங்கு திருக்கோவிலில், பாண்டு ரங்கனின் சன்னதியில் ருக்மணி தேவிக்கு அணிவிக்கப் பட்டிருந்த, அரிய வைரங்கள் பதித்த மூக்குத்தியைக் காணவில்லை.

ரகுநாதனின் மனதில் ஒரு சிறு பொறி! ஓடினான் தன் கடைக்கு. அங்கு வைர வியாபாரி இல்லை. அந்தப் புதிய வைர மூக்குத்தி, அன்னை ருக்மணியினுடையது என்பதை யூகித்துக் கொண்டான்.

நடந்தவற்றை அறிந்து கொண்டான். புரிந்து கொண்டான். வயோதிகராக வந்ததும், பின்பு, வைர வியாபாரியாக வந்ததும், அந்த பாண்டுரங்கனே என்பதை உணர்ந்து கொண்டான். பணத்தால் பெற முடியாத இறைவனின் திருவருளைத் தன் மனைவி லக்ஷ்மீ, பக்தியினாலேயே பெற்று விட்டாளே என்பதை நினைத்து நினைத்து உருகினான். அறியாமை அகன்றது. அகக்கண் திறந்தது.

தன் செல்வங்கள் அனைத்தையும் ஏழைகளுக்கு வாரி வழங்கினான். மனைவி லக்ஷ்மீயுடன், வீட்டை விட்டு வெளியேறினான். பாண்டுரங்கனே தனக்கு அனைத்தும் என்று, அந்த விட்டலனைப் பாடிப் பாடிப் பரவசமடைந்தான் தன் பதங்களால்.

புரந்தர தாஸர் என்று அனைவராலும் போற்றி, வணங்கப்பட்ட, பரம பாகவத உத்தமனாக விளங்கி,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இறுதியில் ''ஹம்பி'' க்ஷேத்திரத்தில், கண்ணன் திருவடிகளை அடைந்தான்.

காலம் அனைத்தையும் கடந்து, நம் உள்ளங்களை நெகிழ வைக்கும் இம் மகானது கன்னட பக்திப் பாடல்கள், ''பதங்கள்'' என, பக்தியுடன் இன்றும் போற்றப்பட்டு வருகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'என்றும் பிரியேன் என்
பக்தர்களை விட்டு!'

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy